
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

செப். 2007
ரூ. 5.00




# அணுசக்தி ஒப்பந்தம்: அம்மணமானது 'தேசியம்'!

www.padippakam.com



# அன்னிய முதலீடுகள்: பகற்கொள்ளையின் மறுபெயர்

**நா**டு தொழில் வளர்ச்சியில் முன்னேறி வல்லரசாக வேண்டுமா? அதற்கு அன்னிய நேரடி முதலீடுதான் ஒரே தீர்வு! வேலை வாய்ப்பு பெருக வேண்டுமா? - அதற்கும் அன்னிய நேரடி முதலீடுதான் ஒரே தீர்வு! தொழில் நுட்பம், தரமான உற்பத்திப் பொருட்கள், உயரிய சேவை, நிர்வாகத் திறன், ஏற்றுமதிக்கான வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம் - என அனைத்திற்கும் ஒரே சர்வரோக நிவாரணியாகச் சித்தரிக்கப்படுகிறது அன்னிய நேரடி முதலீடு.

ஒரு அன்னிய நிறுவனம், நேரடியாகவோ அல்லது இங்குள்ள தரகுப் பெருமுதலாளிகளைப் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொண்டோ ஒரு தொழில் நிறுவனத்தைத் தொடங்கினால், அது அன்னிய நேரடி முதலீடு (FDI) எனப்படுகிறது. இதற்கு அந்த அன்னிய நிறுவனம் தனது சொந்தப் பணத்தை மொத்தமாக முதலீடு செய்வதில்லை. இந்திய வங்கிகள் மூலம் அன்னிய நிறுவனங்கள் இதற்கான நிதியைப் பெற்றுக் கொள்கின்றன.

''பிரிட்ஜ் ஸ்டோன்'' என்ற ஜப்பானிய டயர் கம்பெனி, அமெரிக்காவின் ''ஃபயர் ஸ்டோன்'' டயர் கம்பெனியை 1988-இல் கைப்பற்ற அமெரிக்க நிதி நிறுவனங்கள் உதவின. இதேபோலத்தான், அமெரிக்க என்ரான் நிறுவனம் மகாராஷ்டிராவில் தபோல் மின் நிலையம் தொடங்க இந்திய வங்கிகள் 40%-க்கு மேல் நிதியுதவி செய்தன. சிறிது காலத்திற்குள் என்ரான் நிறுவனம் அமெரிக்கப் பங்குச் சந்தையில் நடத்திய மோசடியின் காரணமாக திவாலாகி விடவே, அதன் துணை நிறுவனமான தபோல் மின் உற்பத்தி நிலையமும் இழுத்து மூடப்பட்டது. என்ரானுக்கு நிதியளித்த இந்திய வங்கிகளுக்கு ஏற்பட்ட கடன் சுமை, இந்திய மக்களின் தலையில் சுமத்தப்பட்டது.

கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாக, இந்திய வங்கிகளிடமிருந்து நிதியைப் பெற்று இந்தியாவில் அன்னிய நேரடி முதலீடு என்ற பெயரால் சூறையாடியது என்ரான். இப்படித்தான் பல அன்னிய நிறுவனங்கள் இந்திய வங்கிகளிடமிருந்து நிதியைப் பெற்று இந்தியாவில் முதலீடு செய்கின்றனவே தவிர, அன்னிய நாட்டிலிருந்து கோடி கோடியாய் பணத்தை மூட்டை கட்டிக் கொண்டு வந்து இங்கு முதலீடு செய்து தொழில் தொடங்குவதில்லை. ஆனாலும் இந்தப் பித்தலாட்டத்தை மூடி மறைத்துவிட்டு இதுவும் அன்னிய நேரடி முதலீடுதான் என்று தாராளமயதாசர்கள் துதிபாடி வரவேற்கின்றனர்.

''உலக வங்கியிடம் கடன் வாங்கினால் நாம் வட்டியோடு அசலைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதால் நமக்கு இழப்பு ஏற்படுகிறது; ஆனால், அன்னிய நேரடி முதலீட்டைப் பொறுத்தவரை நாம் அசலையோ, வட்டியையோ திருப்பிச் செலுத்தப் போவதில்லை. அப்படியிருக்க, நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு சாதகமாக உள்ள அன்னிய நேரடி முதலீட்டை நாம் ஏன் எதிர்க்க வேண்டும்?'' என்று ஏகாதிபத்திய எடுபிடிகள் நியாயவாதம் பேசுகின்றனர்.

ஆனால், ஒரு தொழிலில் நுழையும் அன்னிய நேரடி முதலீடானது காப்புரிமைத் தொகை, இலாப ஈட்டுத் தொகை, தொழில்நுட்பக் கட்டணம், ஆதாயப் பங்கு, திறன் கட்டணம் - எனப் பல்வேறு வடிவங்களில் உள்நாட்டுச் செல்வத்தை உறிஞ்சிக் கொழுக்கிறது. மகாராஷ்டிராவில் என்ரான் நிறுவனம் தபோல் மின் நிலையத்தில் உற்பத்தியைத் தொடங்குவதற்கு முன்பே திறன் கட்டணம் என்ற பெயரில் மாதமாதம் ரூ. 95 கோடி வீதம் விழுங்கியது. இப்படி பல்வேறு அன்னிய நேரடி முதலீட்டு நிறுவனங்கள் பல வடிவங்களில் உறிஞ்சுவதால் உள்நாட்டின் கையிருப்பான அன்னியச் செலாவணி வெகு விரைவில் கரைந்து விடுகிறது. இவ்வாறு காலியாக்கப்படும் அன்னியச் செலாவணியின் மதிப்பு, அன்னிய நேரடி முதலீட்டை விட அதிகமாக இருந்தால், அது நாட்டின் வளர்ச்சியா அல்லது வீழ்ச்சியா?

ஆப்பிரிக்க நாடுகளில் நுழைந்த அன்னிய நேரடி முதலீடு இதைத்தான் செய்துள்ளது. போஸ்ட்வானா நாட்டில் 1995-2003 காலகட்டத்தில் போடப்பட்ட அன்னிய நேரடி முதலீடு ஏறத்தாழ 4243 கோடி ரூபாய். ஆனால் இலாப ஈட்டுத் தொகை, தொழில் நுட்பக் கட்டணம், ஆதாயப் பங்கு முதலான வடிவங்களில் வெளியேறிய உள்நாட்டு மூலதனமோ ஏறத்தாழ 25,294 கோடி ரூபாய்! காங்கோ நாட்டில் அதே காலகட்டத்தில் போடப்பட்ட அன்னிய நேரடி முதலீடு ஏறத்தாழ 7,303 கோடி ரூபாய். வெளியேறிய மூலதனமோ 12,478 கோடி ரூபாய். ஆப்பிரிக்க நாடுகள் மட்டுமல்ல; தென்னமெரிக்கக் கண்டத்திலுள்ள பிரேசில் நாட்டிலும் இதுதான் நடந்தது. அந்நாட்டில் அன்னிய நேரடி முதலீடு பெருகப் பெருக, அந்நாட்டின் அன்னியச் செலாவணி இருப்பும் கரைந்து கொண்டே போனது. 1993-இல் பிரேசிலை விட்டு வெளியேறிய உள்நாட்டு மூலதனம் ஏறத்தாழ ரூ. 148 கோடியாக இருந்தது. 1998-இலோ இது ரூ. 28,000 கோடியாக உயர்ந்தது. (ஆதாரம்: UNCTAD அறிக்கை, 2005)

இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் நடத்திய ஓர் ஆய்வின்படி, ஏறத்தாழ 300 அன்னிய நேரடி முதலீட்டு நிறுவனங்களால் இந்திய அரசுக்குக் கிடைத்த வருவாயை விட, அந்நிறுவனங்களின் தொழில்நுட்பக் கட்டணம், மூலப்பொருள் இறக்குமதி முதலானவற்றுக்காகச் செலவிடப்பட்ட அந்நியச் செலாவணியே அதிகமாக உள்ளது. இவ்வாறு நாட்டின் செலாவணி இருப்பைக் கரைக்கும் நிதிச்சேவை, தொலைத்தொடர்பு, அடிக்கட்டுமான துறை, மின் சக்தி, சில்லறை வணிகம் முதலான துறைகளிலேயே பெருமளவு அன்னிய மூலதனம் நுழைகிறது.

அன்னியச் செலாவணி இருப்பைப் பலவழிகளில் அபகரிப்பதோடு

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com


**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 22**

**இதழ் 11**

**செப். 2007**

**உள்நாடு**
**தனிஇதழ்: ரூ.5.00**
**ஆண்டுசந்தா: ரூ.60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**



*படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்*

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561


# சி.பி.எம்.-இன் இரட்டை நாக்கு

மிகவும் அறிவுப்பூர்வமான, ஆக்கப்பூர்வமான அணுகுமுறை என்று காட்டிக் கொண்டு இந்தியப் போலி கம்யூனிஸ்டுகள் பின்பற்றி வரும் நடைமுறை, எப்போதும் உழைக்கும் மக்களின் நலன்களுக்கு எதிராகவும் நாட்டுக்கும் மக்களுக்கும் துரோகம் இழைப்பதாகவும் இந்திய ஆளும் வர்க்கங்களுக்கும்தான் பயன்பட்டு வந்திருக்கிறது. இந்துத்துவ வகுப்புவாத சக்திகள் ஆட்சிக்கு வருவதை எப்படியாவது தடுப்பது என்ற பெயரில் காங்கிரசின் சிறுபான்மை ஆட்சியை உண்மையில் நிபந்தனையற்ற முறையில் போலி கம்யூனிஸ்டுகள் ஆதரித்து வருகின்றனர்.எனவேதான் ஆரம்பம் முதலே போலி கம்யூனிஸ்டுகளுக்கு உடன்பாடே இல்லாத பல்வேறு விசயங்களுக்கும் ஐக்கிய முற் போக்குக் கூட்டணி அரசு எவ்விதத் தயக்கமும் இன்றி முன்னுரிமை அளித்து வருகிறது. உலக வர்த்தகக் கழக ஒப்பந்தம், சர்வதேச அணுசக்தி கட்டுப்பாட்டு முகமையில் ஈரா னுக்கு எதிராக வாக்களித்தது, அமெரிக்காவுடனான இராணுவ ஒப்பந்தம் போன்ற பிரச்சி னைகளில் போலி கம்யூனிஸ்டுகளின் கருத்துக்களை மன்மோகன் சிங் அரசு கொஞ்ச மும் மதியாது செயல்பட்டது. போலி கம்யூனிஸ்டுகளும் அப்பிரச்சினைகளில் அடையாள எதிர்ப்பு மட்டுமே காட்டி விட்டு, பிறகு கண்டு கொள்ளாமல் இருந்துவிட்டனர்.

இதுபோன்றுதான் அமெரிக்க-இந்திய அணுசக்தி ஒப்பந்தத்திற்காக இரண்டாண்டு களுக்கு முன்பு மன்மோகன் சிங்-ஜார்ஜ் புஷ் கையெழுத்திட்டு, இறுதி முடிவுக்கான பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு வந்திருக்கிறது. கடந்த ஜூலையில் ஒப்பந்தம் அம லாக்கத்திற்கு வந்தபோது அதை கைவிட வேண்டும் என்று போலி கம்யூனிஸ்டுகள் முதலில் கூறினர். ''முடியவே முடியாது; இடதுசாரிகள் விரும்பினால் ஆதரவை விலக் கிக் கொள்ளட்டும்; ஒப்பந்தத்தை கைவிடுவதானால் நான் பதவி விலகி விடுவேன்'' என்று மன்மோகன் சிங் சவாலும் மிரட்டலும் விட்டபோது போலி கம்யூனிஸ்டுகள் பீதி யடைந்தனர். ஒப்பந்தத்தைக் கைவிடுவது என்பதற்கு பதிலாக மறுபேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று கோரினர். ''மறுபேச்சு வார்த்தைக்கு இடமே கிடையாது; இரண்டு அரசுகளும் கையெழுத்திட்டு ஒப்பந்தம் இறுதியாகி விட்டது'' என்று அமெ ரிக்க அமைச்சர் பர்ன்ஸ் திமிராகப் பேசியபோது போலி கம்யூனிஸ்டுகள் தங்கள் நிலையை மேலும் தளர்த்திக் கொண்டனர்.

''ஒப்பந்தத்தை இரத்து செய்யவும் வேண்டாம்; நிறுத்தி விடவும் வேண்டாம்; அதன் அமலாக்கத்தைத் தற்காலிகமாக தள்ளிப் போடுவதுதான் தமது கோரிக்கை'' என்று போலி கம்யூனிஸ்டுகள் மேலும் கீழே இறங்கினார்கள். ஆனால், மன்மோகன் சிங் அரசோ அமெரிக்க-இந்திய அணுசக்தி ஒப்பந்தத்தை அமலாக்குவதற்கான அடுத்தக் கட்ட நடவடிக்கையில் தீவிரம் காட்டியது. அதன் வெளியுறவு செயலர் சர்வதேச அணு சக்தி கட்டுப்பாட்டு முகமையின் ஜெனிவா கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான பயண ஏற்பாடுகளைத் தயாரிக்கத் தொடங்கி விட்டார். இந்திய அணுசக்தி நிலைகளை அமெ ரிக்காவின் கைக்கூலிகள் மேற்பார்வையிடவும் ஒப்பந்தப்படி அமெரிக்காவின் கட்டுப் பாடுகளை அமலாக்கவும் அணுசக்தி மூலப்பொருட்களை பெறவுமே அவர் அக்கூட்டத் திற்கு செல்கிறார்.

அமெரிக்க-இந்திய அணுசக்தி ஒப்பந்தத்தை அமலாக்குவதில் மன்மோகன் சிங் அரசு காட்டிவரும் தீவிரத்தால் மேலும் பீதியடைந்த போலி கம்யூனிஸ்டுகள் தங்கள் உருட்டல் மிரட்டல் நாடகங்களையெல்லாம் முடித்துக் கொண்டு ஒப்பந்த எதிர்ப் பையே கைவிட்டனர். ஒப்பந்தம் குறித்த இடதுசாரிகளின் ஆட்சேபம், சந்தேகம், அச்சம் ஆகியவற்றைத் தீர்ப்பதற்கான அரசின் பொறுப்புப் பற்றியே இப்போது பேசுகின்றனர். ஒப்பந்தத்தை விட, அமெரிக்காவின் சர்வதேச அணுசக்தி கொள்கையை வரையறுக்கும் ஹைட் சட்டம் குறித்துத்தான் இடதுசாரிகள் மிகவும் அச்சப்படுகின்றனர். எனவே அந் தச் சட்டம் இந்தியாவை எப்படிக் கட்டுப்படுத்தும் என்று ஆராய்வதே இப்போது முக்கிய மானது. இந்த ஒப்பந்தத்தை தாமதப்படுத்தினாலோ கைவிட்டாலோ ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து ஆராயப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இப்போது முன் வைக்கின்றனர்.

மன்மோகன் சிங் அரசு இதற்காக ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்துத் தருவதாக வாக்களித்திருக்கிறது. அக்குழுவில் அமெரிக்க-இந்திய அணுசக்தி ஒப்பந்தத்தை வகுத் ததில் முக்கியப் பங்காற்றிய அமெரிக்க அடிவருடிகளே இடம் பெற்றுள்ளனர். இறுதியில் அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தம் அமலாக்குவதில் உள்ள எதிர்ப்புகளையெல் லாம் போலி கம்யூனிஸ்டுகள் கைவிட்டு விட்டனர். இதற்கிடையே அமெரிக்காவிற் கான இந்தியத் தூதர் 'ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்களெல்லாம் தலையறுந்த கோழிகள் போன்று அங்குமிங்கும் அலைகின்றனர்' என்று கிண்டலடித்ததை மட்டும் பெரிதுபடுத் துகின்றனர். உண்மையில், இந்திய அரசியல் சட்டப்படியே இந்திய நாடாளுமன்றம் தலையில்லாத முண்டங்களைக் கொண்டதுதான். அந்நிய நாடுகளுடனான ஒப்பந்தங் கள் எதுவும் நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெறத் தேவையில்லை. அரசின் நிர்வாக அதிகாரங்களில் தலையிடும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்குக் கிடையாது. அவை நாடாளுமன்ற ஒப்புதலுக்குப் பிறகுதான் அமலாக்கப்பட வேண்டும் என்கிற தடையு மில்லை. இந்தப் போலி ஜனநாயகத்தின் மூலம் புரட்சி நடத்துவதாகக் கூறும் போலி கம் யூனிஸ்டுகள் தலையில்லாத முண்டங்கள் தவிர வேறென்ன? ●

www.padippakam.com

# அணுசக்தி ஒப்பந்தம்: அம்மணமானது இந்திய தேசியம்!

இந்தியா-அமெரிக்கா இடையே, அணுசக்தி கூட்டுறவு மற்றும் வர்த்தகம் தொடர்பாக கையெழுத்தாகியுள்ள ''123 ஒப்பந்தம்'', காங்கிரசின் அமெரிக்க அடிமைத்தனத்தை மட்டும் அம்பலப்படுத்தவில்லை; அந்த ''அடியாருக்கு அடியாராக''ப் போலி கம்யூனிஸ்டுகள் செயல்படுவதையும் நாறடித்து விட்டது.

அமெரிக்காவும், இந்தியாவும் இந்த அணுசக்தி கூட்டுறவு ஒப்பந்தத்தை இறுதியாக்குவதற்காக, கடந்த இரண்டு ஆண்டுகளாக, இரகசிய பேச்சு வார்த்தைகளை நடத்தி வந்தன. இப்பேச்சுவார்த்தைகளின் பொழுது, அமெரிக்கா இந்தியா மீது பல கடுமையான நிபந்தனைகள் விதித்து வருவது அம்பலமானபொழுது, பிரதமர் மன்மோகன்சிங், இந்த ஒப்பந்தம் தொடர்பாக சில வாக்குறுதிகளை அளித்தார். மறுசுழற்சி செய்யும் உரிமை, அணுகுண்டு சோதனை நடத்தும் உரிமை போன்ற உரிமைகளை இந்தியாவிற்கு அளித்தால்தான், ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுவோம் எனக் கூறி, எதிர்ப்புகளைச் சமாளித்தார், பிரதமர்.

தற்பொழுது கையெழுத்தாகியுள்ள 123 ஒப்பந்தமோ, மன்மோகன் சிங் அளித்த வாக்குறுதிகளுள் ஒன்றிரண்டை ஏற்பதாக வார்த்தை ஜாலம் காட்டிவிட்டு, இந்திய அணுசக்தித் துறையில் அமெரிக்காவின் ஆதிக்கத்தைத் திணித்திருக்கிறது. இந்த ஒப்பந்தத்தைப் படித்தால் அப்பாவி போல நடமாடும் பிரதமர் மன்மோகன் சிங் கோயபல்சையும் விஞ்சும் புளுகன் என்பது தெரியவரும்.

### மறுசுழற்சி உரிமை என்ற மாயை

கடந்த ஆண்டு அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் இந்தியாவிற்கு வந்த பொழுது, இந்தியாவின் சிவில் பயன்பாட்டுக்கான அணு உலைகளை, சர்வதேச அணு சக்தி ஏஜென்சியின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வர மன்மோகன் சிங் ஒத்துக் கொண்ட இரகசியம் அம்பலமானது. ''இந்தியா தங்குதடையின்றி யுரேனியம் இறக்குமதி செய்து கொள்ளவும்; அதனை மறு சுழற்சி செய்யவும் உரிமை கிடைப்பதால், இந்தக் கண்காணிப்புக்கு ஒத்துக் கொண்டதாக'' மன்மோகன்சிங் நியாயப்படுத்தினார்.

123 ஒப்பந்தமோ, இறக்குமதி செய்யப்படும் யுரேனியத்தை மறுசுழற்சி செய்யும் உரிமையை இந்தியாவிற்கு வழங்கவில்லை. மாறாக, ''மறுசுழற்சி செய்யத் தன்னை அனுமதிக்கும் விண்ணப்பதை, அமெரிக்காவின் காலடியில் சமர்ப்பிக்கும் உரிமையை '' மட்டும்தான் இந்தியாவிற்கு வழங்கியிருக்கிறது. இந்தியாவின் இந்த விண்ணப்பதை உடனடியாக அனுமதிக்கும் கட்டாயம் கூட அமெரிக்காவுக்குக் கிடையாது.

மாறாக, இந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் மீண்டும் ஒரு பேச்சு வார்த்தை நடத்தி, அதில் மறுசுழற்சியை அனுமதிப்பதற்கான ''ஏற்பாடுகள்-செயல்முறைகளை'' முடிவு செய்து, அவை அமெரிக்க காங்கிரசின் ஒப்புதலைப் பெற்ற பின்னர்தான், மறுசுழற்சி உரிமை இந்தியாவிற்கு வழங்கப்படும் என 123 ஒப்பந்தம் கூறுகிறது. அதாவது, மறுசுழற்சி உரிமையை நேரடியாக மறுக்காமல், தலையை சுற்றி மூக்கைத் தொடுவதன் மூலம் மறுக்கிறது, அமெரிக்கா.

அமெரிக்கா பெரிய மனது பண்ணி, இறக்குமதி செய்யப்படும் யுரேனியத்தை மறுசுழற்சி செய்து கொள்ளும் உரிமையை இந்தியாவிற்கு வழங்கினாலும், தற்போதுள்ள அணு உலைகளில் இறக்குமதி செய்யப்பட்ட யுரேனியத்தை மறுசுழற்சி செய்ய முடியாது. ''மறுசுழற்சிக் கென்றே அர்ப்பணிக்கப்பட்ட, உயர் தொழில்நுட்பம் கொண்ட புதிய அணு உலைகளை இதற்காக அமைக்க வேண்டும்'' என இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. ''உயர் தொழில்நுட்பம் கொண்ட புதிய அணு உலை என்பதன் பின்னே, மறுசுழற்சி வழங்கும் உரிமையைக் காலம் கடத்தும் அமெரிக்காவின் நரித்தனம் மறைந்திருப்பதாக'' அணு விஞ்ஞானிகள் அம்பலப்படுத்துகின்றனர்.

அணுசக்தி ஒப்பந்தம் குறித்து, அமெரிக்க-இந்திய அதிகாரிகளிடையே அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் நடந்த இறுதிச் சுற்றுப் பேச்சுவார்த்தை.



### தொழில்நுட்ப இறக்குமதியா? ஆதிக்கப் பொறியா?

அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டால், யுரேனியத்தை மறுசுழற்சி செய்ய, அதனைச் செறிவூட்ட, கனநீர் தயாரிக்கப் பயன்படும் தொழில் நுட்பங்களை இந்தியா தங்குதடையின்றி இறக்குமதி செய்து கொள்ள முடியும் என மன்மோகன் சிங் வாக்குறுதி அளித்திருந்தார். 123 ஒப்பந்தமோ அப்படிப்பட்ட எந்த வாக்கு



படிப்பகம்

www.padippakam.com

றுதியினையும் இந்தியாவிற்கு வழங்க வில்லை. இந்த ஒப்பந்தத்தைப் பேசி முடித்துவிட்டு வந்திருக்கும் அணுசக்தி கமிசனின் தலைவர் அனில் ககோட்கர். ''இந்தத் தொழில் நுட்பங்களை இந்தியாவிற்குத் தரக்கூடாது என்று இருந்த நிலைக்குப் பதிலாக, அதைப் பெறுவதற்கான வாய்ப்பை இந்த ஒப்பந்தம் உருவாக்கியிருக்கிறது'' என்கிறார்.

இந்த ''வாய்ப்பை'' இந்தியா பெற வேண்டும் என்றால், ''இந்தியா மற்றும் அமெரிக்காவின் உள்நாட்டுச் சட்டங்களுக்கு ஏற்பவே இந்தத் தொழில் நுட்ப பரிமாற்றம் நடக்கும்'' என்கிறது, 123 ஒப்பந்தம். இந்த விதி, இந்தியாவையும், அமெரிக்காவையும் ஒரே தட்டில் வைத்துப் பார்ப்பது போலத் தோன்றினாலும், உண்மையோ வேறு மாதிரியானது.

இந்தியாவிடம் தொழில்நுட்ப பரிமாற்றம் தொடர்பாக பிரதமரின் வெற்று வாக்குறுதியைத் தவிர, வேறெந்த விதியும் கிடையாது. ஆனால், அமெரிக்காவிடமோ, இந்தியாவின் மீது தனது மேலாதிக்கத்தைத் திணிக்கும் ''ஹைட்'' சட்டம் இருக்கிறது.

''சர்வதேச நாடுகளின் கண்காணிப்புக்கு உட்படாத இந்தியாவின் அணு உலைகளுக்கு, அணுசக்தி தொழில் நுட்பங்களை ஏற்றுமதி செய்வதைத்'' தடை செய்கிறது ஹைட் சட்டம். அணு சக்தி தொழில் நுட்பங்களை அமெரிக்காவிடமிருந்து இந்தியா பெற வேண்டும் என்றால், சர்வதேச நாடுகள் என்ற போர்வையில் அமெரிக்காவின் கண்காணிப்புக்கு இந்தியாவின் அணு உலைகளைத் திறந்து விட வேண்டும் என்பதுதான் இதன் பொருள்.

அமெரிக்காவின் கண்காணிப்புக்கு இந்திய உட்பட வேண்டும் என்பது 123 ஒப்பந்த விதி எண் 10.4-லும் குறிப்பிடப்பட்டுள்ளது. ''சர்வதேச அணுசக்தி கமிசன், இந்திய அணு உலைகளைத் தனது பாதுகாப்பு விதிகளுக்கு உட்படுத்த முடியாது என முடிவு செய்தால், வழங்குபவரும், பெறுபவரும் கலந்து ஆலோசித்து, 'சரிபார்க்கும்' நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்க வேண்டும்'' என்கிறது, இந்த விதி. ஆனால், குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத கதையாக, அமெரிக்காவின் ஹைட் சட்டம் இந்தியாவைக் கட்டுப்படுத்தாது என்றும்; 'பாதுகாப்பு நடவடிக்கைகள்' என்பது வேறு; சரிபார்க்கும் நடவடிக்கைகள் என்பது



அணுசக்தி ஒப்பந்தத்தை ''எதிர்ப்பது'' குறித்து நடந்த 'மார்க்சிஸ்டு' கட்சியின் அரசியல் தலைமைக் குழு கூட்டம்.

வேறு என்றும் மன்மோகன்சிங் கும்பல் பூசி மெழுகிவருகிறது.

**ஊசிப்பட்டாசு கூட வெடிக்க முடியாது!**

இந்த ஒப்பந்தம் ரத்தானால் கூட, இந்தியாவின் அணு உலைகளுக்கு, அவற்றின் ஆயுட்காலம் முழுவதும் தேவைப்படும் யுரேனியத்தை வழங்கும் உத்தரவாதத்தை அமெரிக்கா தந்திருப்பதாக இந்தியா கூறி வருகிறது. ஆனால், 123 ஒப்பந்தம் கையெழுத்தான மறு நிமிடமே, ''மகனே உன் சமர்த்து'' எனக் கூறி, கையைக் கழுவி விட்டது, அமெரிக்கா. (ஆதாரம்: தி ஹிந்து, 12.08.07, பக்:10)

இந்தியாவைக் குறிவைத்து அமெரிக்கா போட்டுள்ள ஹைட் சட்டம்,''அமெரிக்கா இந்தியாவுடனான 123 ஒப்பந்தத்தை ரத்து செய்தால், அணுவிசை மூலப்பொருள் விற்கும் குழுமத்தைச் சேர்ந்த நாடுகளையும், இந்தியாவிற்கு யுரேனியம் ஏற்றுமதி செய்யவிடாமல் தடுக்க செய்ய வேண்டும்'' எனக் குறிப்பிடுகிறது.. எனவே, ''அமெரிக்கா கைவிட்டால் கூட, அணுவிசை மூலப் பொருள் விற்கும் குழுமத்தைச் சேர்ந்த நாடுகளில் இருந்து யுரேனியத்தை இறக்குமதி செய்து விட முடியும்'' என்ற இந்தியாவின் நம்பிக்கை நிறைவேறுவது எளிமையானதல்ல.

இந்த ஒப்பந்தத்திற்கும், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிப்பதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்கிறார், மன்மோகன் சிங். ஆனால், ஒப்பந்தம் குறித்து இந்தியத் தொலைக்காட்சிகளுக்கு பேட்டி அளித்த அமெரிக்காவின் அரசுச் செயலரும், 123 ஒப்பந்தத்தின் சூத்திரதாரியுமான நிக்கோலஸ் பர்ன்ஸ், ''இந்தியா, ஈரானுடனான தனது பொருளாதார உறவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்; உலகம் மிகவும் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் உள்ள இத்தருணத்தில், சர்வதேச சமூகத்தோடு இணைந்து இந்தியா செயல்பட வேண்டும்'' என அறிவுரை வழங்கியிருக்கிறார். (தி ஹிந்து, 7.08.07, பக்:10).

ஈரானுக்கு எதிராக அமெரிக்கப் படையணியில் சேர்ந்து விடுங்கள் என்ற நெருக்குதலைத் தவிர, இந்த அறிவுரைக்கு வேறு பொருள் கிடையாது; இந்தியாவுடனான அணு சக்தி ஒத்துழைப்பு குறித்து போடப்பட்டுள்ள ஹைட் சட்டமோ, ''இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை, அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு இசைவாக இருக்க வேண்டும்'' என நிபந்தனை விதிக்கிறது.

''இந்தியா அணுகுண்டு சோதனையை மேற்கொண்டால், ஒப்பந்தத்தை முறித்துக் கொள்வோம்'', என அமெரிக்க அரசின் வெளியுறவுத்துறை அறிவித்து விட்டது; ''எதிர்காலத்தில் அணுகுண்டு வெடிக்கும் தேவை இந்தியாவிற்கு ஏற்படாது'' எனக் கூறி, அடிமைக்கு அணுகுண்டு தேவையில்லை என்பதை அமெரிக்க அரசுச் செயலர் நிக்கோலஸ் பர்ன்ஸ் சூசகமாக விளக்கி விட்டார். இதன்பிறகும், ''இந்தியா அணுகுண்டு சோதனை நடத்த ஒப்பந்தம் தடை விதிக்கவில்லை'' என மழைக்காலத் தவளையைப் போல மன்மோகன் சிங் கத்திக் கொண்டிருப்பதை அர்த்தமுள்ளதாக எடுத்துக் கொள்ள முடியுமா?

இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதற்கு அணுகுண்டு சோதனை போன்ற உலகையே அதிர வைக்கும் செயலில் கூட இந்தியா ஈடுபட வேண்


படிப்பகம்

டியதில்லை. ''ஈரான் பிரச்சினையில் அமெரிக்காவின் மனம் நோகும்படி இந்தியா நடந்து கொண்டாலோ; அணு ஆற்றல் பெறாத நாடுகள் அணு ஆயுதம் தயாரிப்பதற்குத் தேவையான மூலக் கூறுகளின் உற்பத்தியை நிறுத்துவதற்காக அமெரிக்கக் கொண்டுவரத் துடிக்கும் சர்வதேச ஒப்பந்தத்தை உருவாக்குவதில், அமெரிக்கா எதிர்பார்த்தபடி இந்தியா நடக்கவில்லை என்றாலோ; அணுஆயுதப் பரவலைத் தடுப்பது தொடர்பாக அமெரிக்காவின் கங்காணியாகச் செயல்பட இந்தியா தயங்கினாலோ, இந்தியாவுடனான 123 ஒப்பந்தத்தை அமெரிக்கா ரத்து செய்து விடலாம்'' என ஹைட் சட்டம் கூறுகிறது.

இந்தியா அணுகுண்டு சோதனை நடத்துவது இருக்கட்டும். இந்தியாவின் அரைகுறை இறையாண்மையைக் கூடக் காவு கேட்கும் இந்த ஹைட் சட்டத்திற்கு எதிராக ஊசிப் பட்டாசைக் கொளுத்திப் போடும் ''நெஞ்சுரம்'' இந்திய அரசிற்கு உண்டா?

### யாருக்கு இலாபம்?

இந்தியாவின் எதிர்கால எரிசக்தி தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் ஈரான் - இந்தியா - பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடையே இயற்கை எரிவாயு வர்த்தக ஒப்பந்தம் ஏற்படவிருந்த நிலையில்தான், இந்த அணுசக்தி ஒப்பந்தத்தை மன்மோகன் சிங் மூலம் இந்தியா மீது திணித்தது, அமெரிக்கா. இந்த ஒப்பந்தத்தின் மூலம் 2020-க்குள் 20,000 மெகா வாட் திறனுள்ள அணு மின்சாரத்தைத் தயாரிக்க மூன்று இலட்சம் கோடி ரூபாய் முதலீடு இந்தியாவிற்குக் கிடைக்கும் எனக் கூறுகிறார்கள்.

இந்தப் புள்ளிவிவரம் உண்மையாகவே இருந்துவிட்டுப் போகட்டும்; அதனால், மக்களுக்குக் குறைந்த விலையில் மின்சாரம் கிடைத்து விடுமா? 9,000 கோடி ரூபாய் முதலீட்டில் மின்சாரம் உற்பத்தி செய்து கொடுக்கப் போவதாக வந்த அமெரிக்காவின் என்ரான், மகாராஷ்டிர மாநில அரசின் மின்சார வாரியத்தையே போண்டியாக்கியது. இந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு பார்த்தால், அணுசக்தி ஒப்பந்தம் மூலம் ''கிடைக்கும்'' அமெரிக்க மூலதனம், நாட்டின் மின்சாரத் துறையையே திவாலாக்கி விடும். இப்படி நாட்டு மக்களுக்கும் பயன்படாத, நாட்டின் அரைகுறை இறையாண்மைக்கும் வேட்டு வைக்

## "போலி சுதந்திரத்தைத் திரைகிழிப்போம்! நாட்டை அடிமையாக்கும் அணுசக்தி ஒப்பந்தத்தை முறியடிப்போம்!"

### — புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்

**ஆ**கஸ்ட்-15; போலி சுதந்திரத்தின் 60-ஆம் ஆண்டு நிறைவு விழாவை ஆட்சியாளர்களும் ஓட்டுப் பொறுக்கிகளும் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் நேரத்தில், 1947-இல் நாம் பெற்றது சுதந்திரமல்ல; அதிகார மாற்றம் தான் என்பதை விளக்கியும், அணுசக்தி ஒப்பந்தம் என்ற பெயரில் நாட்டை அமெரிக்காவுக்கு அடிமையாக்கும் துரோகத்தனத்தைத் திரைகிழித்தும், மறுகாலனியாக்கத்திற்கு எதிராகப் போராட உழைக்கும் மக்களை அறைகூவியும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் துண்டுப் பிரசுரம் - சுவரொட்டிகள் மூலம் விரிவான பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டன.

திருச்சியில், இப்புரட்சிகர அமைப்புகள் இணைந்து 14.8.07 அன்று மாலை திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக, இந்தியாவை அடிமையாக்கும் அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்த்து எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தின. பு.மா.இ.மு. மாவட்டச் செயலர் தோழர் தண்டபாணி தலைமையில் விண்ணதிரும் முழக்கங்களோடு நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், அணுசக்தி ஒப்பந்தத்தின் மூலம் நாட்டை அடிமைப்படுத்தியுள்ள ஆட்சியாளர்களின் துரோகத்தனத்தை அம்பலப் படுத்தியும், மீண்டும் ஒரு சுதந்திரப் போருக்கு அணிதிரள உழைக்கும் மக்களை அறைகூவியும் முன்னணியாளர்கள் உரையாற்றினர்.

உசிலம்பட்டியில், ஆகஸ்ட் 15 அன்று மாலை முருகன் கோவில் அருகே ''காலனியாதிக்கத்துக்கு எதிரான விடுதலைப் போரின் வீரமரபைப் பின் தொடர்வோம்! மறுகாலனியாதிக்கத்திற்கு எதிரான போரை முன்னெடுப்போம்!'' என்ற முழக்கத்துடன் இப்பகுதியில் இயங்கும் வி.வி.மு. பொதுக்கூட்டம் - கலைநிகழ்ச்சியை நடத்தியது. தோழர் சந்திரபோஸ் தலைமையில் நடந்த இப்பொதுக்கூட்டத்தில் தோழர் நடராஜ், தோழர் நாகராசன், தோழர் மோகன், தோழர் காளியப்பன் ஆகியோர் போலி சுதந்திரத்தைத் திரைகிழித்தும் நாட்டைப் பேரழிவுக்குள் தள்ளிவிட்டுள்ள சர்வகட்சி ஆட்சியாளர்களின் துரோகத்தை அம்பலப்படுத்தியும் சிறப்புரையாற்றினர்.

இறுதியில் ம.க.இ.க. மையக் கலைக்குழு நடத்திய புரட்சிகர கலைநிகழ்ச்சியும் குறிப்பாக, ''செட்டிநாட்டு சிதம்பரம், பட்டினிதாண்டா நிரந்தரம்'' என்ற பாடலும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றன.




நாட்டை அடிமையாக்கும் அணுசக்தி ஒப்பந்தத்திற்கு எதிராக தமிழகமெங்கும் இப்புரட்சிகர அமைப்புகள் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு வருகின்றன.

— பு.ஜ. செய்தியாளர்கள்.




கிற இந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்தியே தீரவேண்டும் என மன்மோகன் சிங் ஒற்றைக் காலில் நிற்பதன் பின்னேயுள்ள மர்மம் என்ன?

பொருளாதார சுயசார்பு, அரசியல் இறையாண்மையோடு நமது நாடு இருப்பதைவிட, தெற்காசியாவில் அமெரிக்காவின் பேட்டை ரவுடி என்ற தகுதியைப் பெறுவதுதான் இந்திய ஆளும் கும்பலின் நீண்ட நாள் இலட்சியக் கனவு. இந்த ஒப்பந்தம் அமெரிக்காவின் போலீசுக்காரனாக, கங்காணியாக இந்தியா அங்கீகரிக்கப்படுவதற்கு வாய்ப்புகளைத் திறந்து விட்டுள்ளது.

மேலும், இந்த ஒப்பந்தத்தையடுத்து அணுசக்தித் துறையிலும் தனியார்மயத்தைக் கொண்டுவர அரசு தயாராகி வருவதால், டாடாவும், அம்பானியும் அதற்கான முன்னேற்பாடுகளில் இறங்கி விட்டார்கள். ஏறத்தாழ 15 இலட்சம் கோடி ரூபாய் வரை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலதனம் பாயும் என்பதால், இந்தியத் தரகு முதலாளிகள் கூட்டம் நாக்கில் எச்சில் வழிய இந்த ஒப்பந்தத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறது.

அமெரிக்கா, இந்த ஒப்பந்தம் மூலம் இரண்டு வழிகளில் இலாபம் அடையத் துடிக்கிறது. ஒன்று, வர்த்தகம் இல்லாமல் முடங்கிக் கிடக்கும் அமெரிக்காவின் அணுசக்தி நிறுவனங்களுக்கு மிகப் பெரிய சந்தை திறந்து விடப்பட்டுள்ளது. இந்தியாவின் அணு உலைகளுக்குத் தேவைப்படும் யுரேனியத்தையும், தொழில்நுட்பங்களையும் வழங்குவதாக வாக்குறுதி அளிப்பதன் மூலம், தோரியம் மூலம் அணு மின்சாரம் தயாரிக்க முயலும் இந்தியாவின் சுயசார்புத் தன்மையை முடக்கிப் போட்டு விடவும் திட்டம் போடுகிறது.

இதுவொருபுறமிருக்க, மேற்கு ஆசியாவில் இராக்கிற்கு அடுத்து இரானில் தலையிடுவது; கிழக்காசியாவில் வடகொரியாவைப் பணிய வைப்பது; ரசியாவை முந்திக் கொண்டு, மத்திய ஆசியாவின் எண்ணெய் வளங்களைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவது; அனைத்துக்கும் மேலாக சீனாவை மிரட்டி அடிபணிய வைப்பது - ஆகிய தனது மேலாதிக்க நோக்கங்களுக்கு இந்தியாவைப் போலீசுக்காரனாகப் பயன்படுத்தவே, அணுசக்தி கூட்டுறவு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அரசியல் - பொருளாதார நோக்கங்களுக்கு அப்பால், இந்த ஒப்பந்தத்தில் எந்த வெங்காயமும் கிடையாது.

**மன்மோகனைக் காக்கும் 'மார்க்சிஸ்டு'கள்**

இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே ஜூலை 2005-இல் கையெழுத்தான இராணுவக் கூட்டுறவு ஒப்பந்தம்தான் இந்த அணுசக்தி ஒப்பந்தத்தின் ''தாய்''. இராக்குக்கு எதிரான ஆக்கிரமிப்பு போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்காவின் ''நிமிட்ஸ்'' என்ற அணு ஆயுதக் கப்பலை சென்னை துறைமுகத்துக்கு வரவழைத்து, எரிபொருள் நிரப்பி அனுப்பியது; ஆசியப் பகுதியில் அமெரிக்காவின் இராணுவத்துக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்து தரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியா தயாராக இருப்பது; சீனாவை மிரட்டும் விதத்தில் அமெரிக்கா - ஜப்பான் - ஆஸ்திரேலியா நாடுகள் நடத்தும் இராணுவ பயிற்சி நடவடிக்கைகளில் இந்தியாவும் இணைக்கப்பட்டிருப்பது - என இந்தத் தாய் ஒப்பந்தம் குட்டிகளைப் போட்டுக் கொண்டே போகிறது.

இதுவொருபுறமிருக்க, சர்வதேச அணுசக்தி ஏஜென்சியில் இரானுக்கு எதிராக இந்தியா இரண்டுமுறை வாக்களித்தது; இரானுடனான எரிவாயு

இப்போது விற்பனையில்...

அமெரிக்க-இந்திய அணுசக்தி ஒப்பந்தம்:
அடிமை அடியாள் அணுசக்தி!

மறுகாலனியாதிக்க அடிமைத்தனத்தின் கோரமான உச்சகட்டம் தான் அணுசக்தி ஒப்பந்தமும் இந்திய-அமெரிக்க இராணுவ ஒப்பந்தமும்! சர்வகட்சி துரோகிகளின் ஆதரவோடு திணிக்கப்படும் இந்த அடிமைச் சாசனத்தை முறியடிக்க, நாட்டுப் பற்றும் தன்மான உணர்வும் கொண்ட ஒவ்வொருவரையும் களத்தில் இறங்கி போராட அறைகூவும் பிரசுரம்.

நன்கொடை: ரூ. 5.00

வெளியீடு:
ம.க.இ.க – வி.வி.மு – பு.மா.இ.மு – பு.ஜ.தொ.மு

நூல் கிடைக்குமிடம்:
இரா. சீனிவாசன், புதிய கலாச்சாரம்,
18, முல்லைநகர் வணிக வளாகம், 2-வது நிழற்சாலை,
அசோக்நகர், சென்னை-600 083. ☎:044-23718706

www.padippakam.com

வர்த்தக ஒப்பந்தத்தைக் கிடப்பில் போட்டு வைத்திருப்பது; ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தற்காலிக உறுப்பினர் பதவிக்குப் போட்டி யிட்ட வெனிசுலாவுக்கு எதிராக வாக்களிக்குமாறு இந்தியாவிடம் அமெரிக்கா பேரம் நடத்தியது - இவை யாவும் தற்காலிகமாக நடந் துவிட்ட ''பிழைகள்'' அல்ல. உல கின் ஒரே வல்லரசு அமெரிக்கா தான். இந்த உண்மைக்கு ஏற்ப, நாங் கள் பதவியேற்றவுடனேயே இந்தி யாவின் அயலுறவுக் கொள்கையை ''தைரி யமாக மாற்றிக் கொண்டு விட்டோம்'' என இந்த அடிமைத்த னத்துக்கு விளக்கம் சொல்லியிருக் கிறார், பிரதமர் மன்மோகன் சிங்.

மன்மோகன் சிங் கும்பலைப் பொறுத்தவரை நாட்டின் இறை யாண்மை என்பது, வழக்கொழிந்து போன அரசியல் கொள்கை. அதனால் தான், நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமலேயே இந்த ஒப்பந்தங்க ளைப் போட்டு, நாட்டின் மீது திணிக்கி றார். நாடாளுமன்றம் என்பது இந்த மறுகாலனியாதிக்க அடிமைத்தனத்தை சிறிய சலசலப்போடு அங்கீகரிக்கும் ரப்பர் ஸ்டாம்ப் என்பது அம்பலமாகி விட்டது.

இந்த நாடாளுமன்ற அமைப்பு முறையைக் கவிழ்க்காமல் இந்த அடி மைத்தனத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியாது. ஆனால், போலி கம்யூ னிஸ்டுகளோ, மன்மோகன் சிங் அர சைக் கவிழ்ப்பதற்குக் கூடத் தயாராக இல்லை. அணுசக்தி ஒப்பந்தத்தை நாடாளுமன்ற வாக்கெடுப்புக்கு விட வேண்டும் என்று பா.ஜ.க. ''உதார்'' விடுவதைக் கூட, போலி கம்யூனிஸ்டு களால் பொறுத்துக் கொள்ள முடிய வில்லை. ''இந்த அரசுக்கு ஆபத்து இல்லை'' என 'மார்க்சிஸ்கள்' வெளிப் படையாக அறிவித்ததன் மூலம், 'இடது'சாரிக் கட்சிகள் அணுசக்தி ஒப் பந்தத்துக்கு எதிராகக் கூடிகூடிப் பேசி யதும், தினந்தோறும் அறிக்கைகள் விட்டதும், விளம்பரம் தேடிக் கொள் ளும் நாடகம் என்பது அம்பலமாகி விட்டது.

மன்மோகன் சிங் அரசு கவிழ்ந்து விட்டால், இடைத் தேர்தலைச் சந்திக்க நேரிடும் என்பதைவிட, அமெரிக்கா வின், டாடா-அம்பானியின் கோபத் திற்கு ஆளாக நேரிடும் என்ற பயம் தான் பா.ஜ.க.வை மட்டுமல்ல, போலி கம்யூனிஸ்டுகளையும் பிடித்தாட்டுகி றது. 'மார்க்சிஸ்டு' கட்சிக்குள்ளே, புத்த

**இந்திய நாடாளுமன்ற அமைப்பு முறையைக் கவிழ்க்காமல் அமெரிக்க அடிமைத்தனத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியாது. ஆனால், போலி கம்யூனிஸ்டுகளோ, மன்மோகன் சிங் அரசைக் கவிழ்ப்பதற்குக் கூடத் தயாராக இல்லை.**

தேவை மன்மோகனின் தூதராகப் பயன்படுத்தலாம் என காங்கிரசு திட் டம் போட்டு விருந்து கொடுக்கும் அளவிற்கு, சி.பி.எம். கட்சியின் தலைமை சீரழிந்து கிடக்கிறது.

என்ரான் என்ற அமெரிக்க கம்பெ னியைக் கூட எதிர்த்து நிற்க மறுத்த பா.ஜ.க. கும்பல், இந்த அணுஆயுத ஒப்பந்தத்தைக் கிழித்தெறியப் போவ தில்லை. மேற்கு வங்க மாநிலத்தில் அமெரிக்கா நடத்திய விமானப் போர் பயிற்சிகளை வேடிக்கை பார்த்த போலி கம்யூனிஸ்டுகள், இந்திய - அமெரிக்க இராணுவ ஒப்பந்தத்தை விமர்சிப்பதோடு ஒடுங்கி விடுவார் கள். அணுசக்தி ஒப்பந்தத்தை ஒரு எழுத்து கூட மாறாமல் அப்படியே நடைமுறைப்படுத்துவதா? அல்லது, சில சலுகைகளைப் பெற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்துவதா? — என்பது தான் மன்மோகன் சிங்குக்கும், மார்க் சிஸ்டுகளுக்கும் இடையேயுள்ள வேறு பாடு.

அதனால்தான், நாடாளுமன்ற குழு என்ற ஊறுகாய் பானைக்குள் இந்த ஒப்பந்தத்தைப் போட்டு அமுக்கி விடத் துடிக்கிறது, பா.ஜ.க. போலி கம்யூனிஸ்டுகளோ, இந்த ஒப்பந் தத்தை நடைமுறைப்படுத்தும் விதத்தில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்பதை நிறுத்தி வைக்கவேண் டும்; ஹைட் சட்டத்தின் பாரதூர மான விளைவுகளை ஆராய, காங் கிரசு தன் விருப்பப்படி ஒரு கமிட் டியை அமைக்க வேண்டும் என வேண்டுகோள் வைக்கிறார்கள்.

தனியார்மயம்-தாராளமயத்தை மனித முகத்துடன் நடைமுறைப்ப டுத்த வேண்டும் எனக் கோருவ தைப் போல, இந்த ஒப்பந்தமும் ''கொஞ்சம் சுய மரியாதையுடன்'' அமல்படுத்தப்பட வேண்டும் என்பது தான் 'மார்க்சிஸ்டு'களின் கோரிக்கை. இந்தப் பித்தலாட்ட எதிர்ப்பின் மூலம், மறுகாலனியாதிக்க எதிர்ப்பில் தாங்கள் அம்மணமாகி நிற்பதை மூடி மறைத் துக்கொள்ள முயலுகிறார்கள்.

மறுகாலனியாதிக்க அடிமைத்தனத் தின் கோரமான உச்சகட்டம்தான் இந்த அணுசக்தி ஒப்பந்தமும், இந்திய - அமெரிக்க இராணுவ ஒப்பந்தமும். நமது விளைநிலங்களை, சிறுதொழில் களை, பொதுத்துறை நிறுவனங்களைக் காவு வாங்கிய மறுகாலனியாதிக்கம், அணுசக்தி ஒப்பந்தத்தின் மூலம் நாட் டின் மானத்தையும் பெயரளவு இறை யாண்மையையும் கூடக் காவு கேட்கி றது. இந்த அடிமைத்தனம் ''வளர்ச்சி'' என்ற பெயரில் நியாயப்படுத்தப்படுவ தும், அதை உழைக்கும் மக்கள் மௌன மாக சகித்துக் கொண்டிருப்பதும் மிகப் பெரும் அவமானம் மட்டுமல்ல; அபா யமும் கூட!

● செல்வம்




இப்போது விற்பனையில்...

பிரெடரிக் எங்கெல்ஸ்

– லெனின்

பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் போராட்ட வீரரும் பேராசானுமாகிய தோழர் எங்கெல்சை அரசியல்-சித்தாந்த ரீதியாக அறிமுகம் செய்து தோழர் லெனின் எழுதிய சிறுநூல்

கீழைக்காற்று வெளியீடு

விலை: ரூ. 6.00

நூல் கிடைக்குமிடம்:

கீழைக்காற்று வெளியீட்டகம்,

10, அவுலியா தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.

☎ 044-28412367




படிப்பகம்

www.padippakam.com

# ரிலையன்ஸ் எதிர்ப்பு: சி.பி.எம்-இன் பித்தலாட்டம்

சில்லறை வணிகத்தில் நுழைந்து நாடெங்கும் நாலு கோடிக்கும் மேலான உழைக்கும் மக்களின் வாழ்வைப் பறிக்க வந்துள்ள ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு காங்கிரசு, பா.ஜ.க., தி.மு.க., அ.தி.மு.க. முதலான ஆளும் வர்க்கக் கட்சிகள் பட்டுக் கம்பளம் விரித்து வரவேற்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆனால் ரிலையன்சுக்கு எதிராக வீரவசனம் பேசிக் கொண்டே, ரிலையன்சு கடைகளுக்குக் குத்துவிளக்கேற்றி திறப்பு விழா நடத்துபவர்களைத் துரோகிகள் என்பதா, அல்லது மக்களின் எதிரிகள் என்பதா?

இவர்கள் வேறு யாருமல்ல, ரிலையன்சுக்கு எதிராக வீரதீரமாக வாய்ச்சவடால் அடித்துவரும் சி.பி.எம். கட்சியினர்தான் கடந்த ஜூலை மாதத்தில், கேரளத்தில் இந்த அயோக்கியத்தனத்தை அரங்கேற்றியுள்ளனர்.

கொச்சி நகரத் துணைமேயரும், சி.பி.எம். கட்சியின் எர்ணாகுளம் மாவட்டக் கமிட்டி உறுப்பினருமான சி.கே. மணிசங்கர், லெமக்காரா எனுமிடத்தில் ரிலையன்ஸ் பிரஷ் காய்கறிக் கடையைத் தொடங்கி வைத்து, தமது கட்சியின் துரோகத்தனத்தை அம்மாநிலமெங்கும் பறைசாற்றியுள்ளார். துணை மேயரே இந்த வேகத்தில் செல்லும்போது சி.பி.எம். கட்சியின் கொச்சி எம்.எல்.ஏ. சும்மாயிருப்பாரா? மாநிலக் கமிட்டி உறுப்பினரும் கொச்சியின் எம்.எல்.ஏ.வுமான தினேஷ் மணி, தேவாரா எனுமிடத்தில் ரிலையன்ஸ் சூப்பர் மார்க்கெட்டைத் திறந்து வைத்து அசத்தியுள்ளார்.

சில்லறை வணிகத்தில் நுழைந்துள்ள ரிலையன்சுக்கு எதிராக சி.பி.எம். கட்சி வீரவசனம் பேசி வரும்நிலையில், அம்மாநிலத்தை ஆளும் சி.பி.எம். தலைமையிலான இடதுசாரி அரசு, ரிலையன்சை அனுமதிப்பது ஏன்? அதிலும் சி.பி.எம். பிரமுகர்களே கடையைத் திறந்து வைக்கிறார்கள் என்றால், சி.பி.எம். கட்சி ரிலையன்சை ஆதரிக்கிறதா அல்லது எதிர்க்கிறதா என்று கேட்டு கேரள மாநிலமெங்கும் மக்கள் காறி உமிழத் தொடங்கியதும் சி.பி.எம். கட்சித் தலைமை பீதியடைந்தது. தனது துரோகத்தனத்தை மறைக்க, இப்பிரமுகர்களிடம் ரிலையன்ஸ் கடை திறப்பு பற்றி விளக்கம் கோரும் நாடகமாடியது.

இதைத் தொடர்ந்து இப்பிரமுகர்கள் தமது செயலுக்கு வருத்தம் தெரிவித்து பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டனர். தங்களது நெருங்கிய நண்பர்களின் வற்புறுத்தலால் ரிலையன்ஸ் கடைகளைத் திறந்து வைத்ததாக விளக்கம் அளித்தனர்.

இப்'பாட்டாளி' வர்க்கப் பிரமுகர்களுக்கு நெருங்கிய நண்பர்களாக இருப்பவர்கள் முதலாளித்துவவாதிகள்தான் என்பதையும், நாளை இந்த 'நண்பர்கள்' வற்புறுத்தினால் உழைக்கும் மக்களுக்கு எதிராக எதையும் செய்யத் துணியும் துரோகிகள்தான் இப்பிரமுகர்கள் என்பதையும், இவர்களது தன்னிலை விளக்கமே நிரூபித்துக் காட்டியது. ஆனாலும் இப்பிரமுகர்கள்மீது கட்சித் தலைமை பாரதூரமான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பெயரளவுக்கு எடுத்த நடவடிக்கையிலும் இரட்டை அளவுகோல்களைப் பின்பற்றியுள்ளது.

எர்ணாகுளம் மாவட்டக் கமிட்டி மணிசங்கரின் விளக்கத்தைப் பரிசீலித்து, அவருக்கு 'எச்சரிக்கை' விடுப்பதாக அறிவித்தது. இம்மாவட்டக் கமிட்டி, கேரள முதல்வர் அச்சுதானந்தன் தலைமையிலான கோஷ்டியின் ஆதிக்கத்தில் உள்ளது.

மறுபுறம், தினேஷ்மணியின் விளக்கத்தை மாநிலக் கமிட்டி பரிசீலித்து, அவரை மன்னிப்பதாக அறிவித்துள்ளது. மாநிலக் கமிட்டியோ, மாநிலச் செயலாளர் பினராயி விஜயன் தலைமையிலான கோஷ்டியின் ஆதிக்கத்தில் உள்ளது. அச்சுதானந்தன் கோஷ்டியிலிருந்து விலகி விஜயன் கோஷ்டிக்கு தினேஷ் மணி வந்துள்ளதால், அவருக்குச் சாதகமாக இந்த 'நடவடிக்கையை' மாநிலக் கமிட்டி எடுத்துள்ளது.

ஒரே வகையிலான துரோகத்துக்கு, மாவட்டக் கமிட்டியில் எச்சரிக்கை; மாநிலக் கமிட்டியில் மன்னிப்பு என இரட்டை அளவுகோல்களுடன் சி.பி.எம். கட்சி எடுத்துள்ள இந்நடவடிக்கைகளைப் பார்த்து கேரள மக்கள் கைகொட்டிச் சிரிக்கிறார்கள். கட்சியின் கொள்கைபடி தாங்கள் செயல்படுவதாகவும், ஆனால் விஜயன் கோஷ்டி சமரசப் பாதையில் செல்வதாகவும் புலம்பும் அச்சு கோஷ்டி, இந்த இரட்டை அளவுகோல் விவகாரத்தை வைத்து உட்கட்சித் தேர்தலில் ஆதாயமடைய முயற்சிக்கிறது. துரோகிகளுக்கிடையே கோஷ்டிச் சண்டை புழுத்து நாறும் அதேநேரத்தில், ரிலையன்ஸ் நிறுவனமோ புதிய பேரங்காடிகளைத் திறந்து, சில்லறை வியாபாரிகளின் வாழ்வைச் சூறையாடிக் கொண்டிருக்கிறது.

• அழகு

**சி.பி.எம்.-இன் 'ரிலையன்ஸ் எதிர்ப்பு'க் கொள்கை!**



மேடைக்கு... பிழைப்புக்கு...


படிப்பகம்

www.padippakam.com

## கோவை–மும்பய் குண்டு வெடிப்பு தீர்ப்புகள்:

# நவீன மனுநீதி!

**''ஒரு இந்து ஏதாவது செய்து விட்டால் விசாரணைக் கமிசன் அமைக்கப்படுகிறது; ஆனால், ஒரு முசுலீம் ஏதாவது செய்துவிட்டால், அவன் தூக்கில் போடப்படுகிறான்.''**

— மும்பய்க் குண்டு வெடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த ஜாகீர் உசைனுக்குத் தண்டனை அறிவிக்கப்பட்டவுடன், அத்தண்டனை குறித்து அவர் பத்திரிகையாளர்களிடம் சொன்ன கருத்து இது. இதனை வெறுப்பில் விழைந்த வசவாக எடுத்துக் கொள்ள முடியாது. மும்பய் மற்றும் கோவை குண்டு வெடிப்பு வழக்குகளில் விசாரணை நடைபெற்று தீர்ப்பு அறிவிக்கப்பட்ட விதத்தையும்; மும்பய் மற்றும் கோவை கலவர சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் முசுலீம்கள் என்பதாலேயே, அவ்வழக்குகளில் நீதி மறுக்கப்பட்டு விடுவதையும் ஒப்பிட்டுப்பார்த்தால், ஜாகீர் உசேனின் விமர்சனத்தில் உள்ள நியாயத்தை எவரும் மறுத்துவிட முடியாது.

1998-இல் நடந்த கோவை குண்டு வெடிப்பு வழக்கில், ஏறத்தாழ ஒன்பதரை ஆண்டுகள் கழித்து கடந்த ஆகஸ்ட் மாதம் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அல்-உம்மா தலைவர் பாஷா உள்ளிட்ட 69 பேர் மீது சதிக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும்; 84 பேர் மீது சதிக் குற்றச்சாட்டு அல்லாத வேறு குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் தீர்ப்பளித்துள்ள சிறப்பு நீதிமன்றம், மதானி உள்ளிட்ட 8 பேரின் மீதான எந்தக் குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை எனக் கூறியிருக்கிறது.

''தடா''சட்டத்தின்கீழ் விசாரணை நடைபெற்ற மும்பய் குண்டு வெடிப்பு வழக்கில் கூட , நடிகர் சஞ்சய் தத் உள்ளிட்டு பலருக்குப் பிணை வழங்கப்பட்டது. ஆனால், சாதாரண குற்றவியல் சட்டங்களின் கீழ் கோவை குண்டு வெடிப்பு வழக்கிலோ, சிறையில் அடைக்கப்பட்டிருந்த 168 பேரில் ஒருவருக்குக் கூடப் பிணை வழங்கப்படவில்லை. மதானிக்குப் பிணையே வழங்கக்கூடாது என அ.தி.மு.க. ஆட்சியில் உத்தரவு போடப்பட்ட விநோதமும் இந்த வழக்கில் நடந்தது.

இத்தீர்ப்பின்படி, 84 பேர் மீதான சதிக் குற்றச்சாட்டு — அதிகபட்சமாக தூக்கு தண்டனைத் தரக்கூடிய குற்றம் — நிரூபணமாகவில்லை. ஆனால், இவர்கள் ஏற்கெனவே விசாரணைக் கைதிகளாக ஒன்பதரை ஆண்டுக்கால ''தண்டனையை''அனுபவித்து விட்டதால், இவர்களைக் குற்றமற்றவர்கள் எனத் தீர்ப்பளித்து வெளியேவிட்டால், அரசின் நடுநிலையான நீதி பரிபாலனை முறை அம்மணமாகிவிடும். அதனாலேயே இவர்கள் அனுபவித்த தண்டனைக் காலத்தை ஈடு செய்யும் வகையில், தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பதாக எதிர்த்தரப்பு வழக்குரைஞர்கள் கூறுகின்றனர்.

மதானி உள்ளிட்ட 8 பேர் மீது அரசால் சாட்டப்பட்ட எந்தக் குற்றச்சாட்டும் நிரூபணமாகவில்லை. ஆனாலும், இவர்களை உடனடியாக விடுதலை செய்ய மறுத்துவிட்ட சிறப்பு நீதிமன்றம், விரும்பினால் இவர்கள் பிணையில் வெளியே போகலாம் என உத்தரவிட்டது. விசாரணை நீதிமன்றத்தாலேயே நிரபராதிகளாக அறிவிக்கப்பட்டவர்கள், விசாரணைக் கைதிகளைப் போல பிணையில் வெளியே வந்துள்ள அதிசயமும் இந்த வழக்கில் தான் நடந்தது. தண்டனை அல்லது விடுதலை என்ற நீதி பரிபாலனமுறைக்கு இது எதிரானது என எதிர்தரப்பு வழக்குரைஞர்கள் இத்தீர்ப்பைக் கண்டித்துள்ளனர்.

**நிரபராதி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட பிறகும், விடுதலை மறுக்கப்பட்ட அப்துல் நாசர் மதானி.**



ஐந்து பேர் மீதான தீர்ப்பை நிறுத்தி வைத்திருப்பதாக அறிவித்திருந்த சிறப்பு நீதிமன்றம், ''இவர்கள் மீது அரசால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லையென்றாலும், இவர்கள் மீது வேறு குற்றச்சாட்டுகளை நிருபிப்பதற்கான ஆதாரம் உள்ளதாக'' 'கண்டுபிடித்து' தீர்ப்பளித்தது. ''இந்த ஐந்து பேர் மீது புதிதாகக் குற்றம் சுமத்தப்பட ஆதாரம் இருந்தால், அக்குற்றச்சாட்டுகளை தனியாக விசாரணை நடத்திதான் தீர்ப்பளிக்க வேண்டும்'' என எதிர்த்தரப்பு வழக்குரைஞர்கள் கூறியதை நீதிபதி ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால், ''இந் நீதிமன்றம் குற்றவியல் சட்ட நடைமுறைகளைப் பின்பற்றாமல் தீர்ப்பு அளிப்பதாக'' எதிர்த்தரப்பு வழக்குரைஞர்கள் திருமலைராசனும், ப.பா.மோகனும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சிறப்பு நீதிமன்றம் சார்புத்தன்மையோடு, கொஞ்சம் பச்சையாகச் சொன்னால் காவித் தன்மையோடு நடந்து கொண்டதை நிரூபிக்கும் ஆதாரங்கள் இவை. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சட்டபூர்வ உரிமைகளை மறுத்ததன் மூலம், அவர்களை எப்படியாவது தண்டித்து விட வேண்டும் என்பதில் போலீசும், நீதிமன்றமும் கள்ளக் கூட்டாளிகளாகச் செயல்பட்டதை இவ்வழக்கு விசாரணை நெடுகிலும் காண முடியும்.

கோவை குண்டு வெடிப்பை, கோவை கலவரத்தோடு தொடர்பில்லாத தனித்ததொரு நடவடிக்கையாகப் பிரித்துப் பார்க்க முடியாது. கோவை கலவரத்தின் எதிர்வினைதான் கோவை குண்டு வெடிப்பு. இந்தியக் குற்றவியல் சட்ட நடைமுறையின் படி, கோவைக் கலவரத்தைதான் கோவை குண்டு வெடிப்பின் தூண்டுதல் வழக்காகவும்; எதிராளியை வம்புச் சண்டைக்கு இழுத்த வழக்காகவும் (Agrressor) நிர்ண்யம் செய்திருக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

''இக்கோவைக் கலவரம் கூட, செல்வராஜ் என்ற போக்குவரத்து போலீசுக்காரர் சில முசுலீம் இளைஞர்களால் கொல்லப்பட்டதையடுத்து, தன்னெழுச்சியாக நடைபெற்றதல்ல; இந்து தீவிரவாதிகளும் போலீசும் கை கோர்த்து கொண்டு நடத்திய வன்முறை'' என அக்கலவரத்தைப் பற்றி விசாரணை நடத்திய கோகுலகிருஷ்ணன் கமிட்டி குறிப்பிட்டுள்ளது.

கோவை கலவரத்தைத் தூண்டுதல் வழக்காக நிர்ணயித்து, குண்டு வெடிப்பு வழக்கை நடத்தியிருந்தால், குண்டு வெடிப்பு வழக்கைத் தள்ளுபடி செய்திருக்க வேண்டும்; அல்லது, குறைந்தபட்ச தண்டனைதான் கொடுத்திருக்க முடியும். இச்சட்ட பூர்வ உரிமை முசுலீம்களுக்குக் கிடைத்துவிடக் கூடாது என்பதற்காகவே, சிறப்பு நீதிமன்றம் கோவை கலவரத்தைப் பற்றி வாய் திறக்கவே மறுத்துவிட்டது.

குற்றச்சாட்டு வனையப்படும் பொழுதே (framing of charges), ''அக்குற்றச் சாட்டுகளில் இருந்து தங்களை விடுவிக்கக் கோரும் மனு கொடுத்து, அதன் மீது விசாரணை நடத்தக் கோரும் உரிமை'' குற்றம் சாட்டப்பட்டோருக்கு உண்டு. ''குற்றப்பத்திரிகை 17,000 பக்கங்களைக் கொண்டிருப்பதால், அதைப் படித்து விடுவிப்பு மனு தாக்கல் செய்ய கால அவகாசம் அளிக்க வேண்டும்'' என எதிர்தரப்பு வழக்குரைஞர்கள் கோரினர். ''உச்ச நீதிமன்றம் இவ்வழக்கை விரைந்து முடிக்க வேண்டும் என வாய்மொழி உத்தரவு இட்டிருப்பதாக''க் கூறி, கால அவகாசம் அளிக்க மறுத்து விட்டது, சிறப்பு நீதிமன்றம்.

இவ்வழக்கில் 9 ஆவது குற்றவாளியாகக் குற்றம் சாட்டப்படிருந்த ஓம் பாபு என்பவருக்கு எதிராக, அவரது தம்பி முனாபை சாட்சி சொல்ல போலீசார் அழைத்து வந்தனர். முனாப் நீதிமன்றத்திலேயே, ''தனது அண்ணனுக்கு எதிராகச் சாட்சி சொல்ல போலீசார் தனக்கு இலஞ்சம் கொடுத்ததை'' அம்பலப்படுத்தியதோடு, போலீசார் கொடுத்த பணத்தையும் நீதிமன்றத்திலேயே ஒப்படைத்தார்.

விசாரணையின் பொழுது, சாட்சிகள் குற்றவாளிகளை அடையாளம் காட்ட முடியாமல் தடுமாறிய பொழுது, போலீசாரே சாட்சிகளுக்குக் குற்றவாளிகளை அடையாளம் காட்டி உதவினர். நீதிபதியோ, போலீசாரின் இந்த அத்துமீறலைக் கையைக்கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்திருக்கிறார்.



**கோவை குண்டு வெடிப்புக்குப் பிறகு முசுலீம் குடியிருப்புகளில் நடத்தப்பட்ட தேடுதல் வேட்டை (கோப்புப் படம்)**

குற்றவாளிகளைச் சிறையில் இருந்து நீதிமன்றத்திற்கு அழைத்து வரும் பொழும், சிறைச்சாலை வாசலில் சாட்சிகளை நிற்க வைத்து, அவர்களுக்குக் குற்றவாளிகளை போலீசார் அடையாளம் காட்டியிருக்கின்றனர். போலீசாரின் இந்த சட்டவிரோத நடவடிக்கையைக் குற்றவாளிகள் நீதி மன்றத்தில் முறையிட்ட பிறகும் கூட, சாட்சிகளை போலீசார் தயார்படுத்துவதை நீதிபதி தடுக்கவில்லை.

கோவை-மேட்டுப்பாளையம் சாலையையொட்டி அமைந்துள்ள கருணாநிதி நகர் பகுதியைச் சேர்ந்த 38 பேர் மீது குண்டு வெடிப்பு வழக்கு பாய்ந்துள்ளது. ''இவர்களுக்கும் குண்டு வெடிப்பிற்கும் சம்பந்தம் இல்லை; குண்டு வெடித்த நாளன்று மாலையில் இந்து முன்னணியினர் கருணாநிதி நகரினுள் புகுந்து, கலவரம் நடத்தி, இந்த 38 பேரை போலீசில் அன்றே ஒப்படைத்ததையும்; போலீசார் இவர்களை இரண்டு நாட்கள் கழித்து 16..02.98 அன்று கைது செய்த தாகக் காட்டிய பொய்யையும்; இந்த 38 பேருக்கு எதிராக் வாக்குமூலம் கொடுத்த வி.என்.ராஜன், இந்து முன்னணியைச் சேர்ந்த முழுநேர ஊழியர் என்பதையும்; இவர்களுக்கு எதிராகச் சாட்சியம் அளித்த அனைவரும் வீ.என். ராஜனின் சொந்தக்காரர்கள் என்பதையும்'' எதிர்தரப்பு வழக்குரைஞர்கள் விசாரணையின் பொழுது நிருபித்துள்ளனர். எனினும், ஒரு இந்து முன்னணி குடும்பத்தின் பொய் சாட்சியத்தை நம்பி, 38 முசுலீம் குடும்பங்களைத் தண்டித்திருக்கிறது, நீதிமன்றம்.

அத்வானியின் பொதுக்கூட்டம் நடைபெறவிருந்த பி.பி.ரோடு; சம்பந்தம் சாலை உள்ளிட்ட மூன்று இடங்களில் குண்டு வைத்த தீவிரவாதிகளை நேரில் பார்த்த சாட்சியாக விஜயகுமார் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். இவரைப் போல 62 சாட்சிகள், பல இடங்களில் குண்டு வைத்துவிட்டுப் போன குற்றவாளிகளை நேரில் பார்த்த சாட்சிகளாக நிறுத்தப்பட்டனர். சினிமா கதாநாயகர்களைப் போல இந்த சாட்சிகள், ''இரண்டு- மூன்று ரோல்களில் பிறந்திருந்தால்'' மட்டுமே இது சாத்தியம் என்பதால், இந்த 62 சாட்சிகளை மட்டும் மீண்டும் விசாரிக்க வேண்டும் என எதிர்தரப்பு வழக்குரைஞர்கள் கோரியதை நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

இந்த வழக்கின் மிக முக்கியமான குற்றவாளியாக முன் நிறுத்தப்பட்டவர் மதானி. அவருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட 23 சாட்சியங்களுள் ஒருவர் கூட, அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாக சாட்சியம் அளிக்கவில்லை. இதிலிருந்தே போலீசாரின் புலன் விசாரணை எந்த இலட்சணத்தில் நடந்திருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இந்த வழக்கில் சாட்சியம் அளித்த 1,300 சாட்சியங்களுள் பெரும்பாலானவை, போலீசு தயார்படுத்திக் கொண்டுவந்த பொய்சாட்சியங்கள் அல்லது இந்து முன்னணியைச் சேர்ந்தவர்கள் என்பதை விசாரணையின் பொழுதே எதிர்தரப்பு வழக்குரைஞர்கள் நிருபித்துள்ளனர். எனினும், அச்சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதை நடுநிலையான,


படிப்பகம்

www.padippakam.com

நியாயமான தீர்ப்பாக எடுத்துக் கொள்ள முடியுமா?

காஞ்சி சங்கராச்சாரி ஜெயேந்திரன் மீதான கொலை வழக்கின் விசாரணை தொடங்கும் முன்பே, அவர் சதிச் செயலில் ஈடுபட்டதற்கான ஆதாரம் இல்லை என நற்சான்றிதழ் வழங்கியது நீதிமன்றம். ஆனால், மதானி மீதான குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித சாட்சியமும் இல்லை என்று வழக்கு விசாரணையில் நிரூபிக்கப்பட்ட பிறகும் கூட, இவருக்குப் பிணை வழங்க உச்ச நீதி மன்றம் கூட மறுத்துவிட்டது.

தீட்டுப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக சங்கராச்சாரிக்குச் சிறைச்சாலையில் தனிச்சமையல் செய்து கொடுக்கப்பட்டது. ஆனால், சர்க்கரை வியாதியால் பாதிக்கப்பட்டிருந்த மதானிக்கு உரிய சிகிச்சை எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு கூட மறுக்கப்பட்டது. ''சட்டத்தின் முன் அனைவரும் சமம்'', ''இந்தியா ஒரு மதச் சார்பற்ற குடியரசு'' என இந்திய அரசியல் சாசனம் பீற்றிக் கொள்கிறது. ஆனால், இது ஒரு மோசடி என்பதை நிரூபிப்பதற்கு ஆர்.எஸ்.எஸ். ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற அவசியமே இல்லை. நீதிமன்றங்களே அந்தத் திருப்பணியைச் செய்து விடுகின்றன.

அமெரிக்கா, அல்-கொய்தா தீவிரவாதிகளை விசாரணையின்றி தனிமைச் சிறையில் அடைத்து வைத்திருப்பதை எழுதிய இந்தியப் பத்திரிகைகள், தமிழ்நாட்டில் 168 முசுலீம்கள் பிணைகூட வழங்கப்படாமல் துன்புறுத்தப்பட்டதைக் கண்டுகொள்ளவேயில்லை.

18 முசுலீம்கள் கொல்லப்பட்ட கோவை கலவரம் தொடர்பாக தொடரப்பட்ட ஏறத்தாழ 100 வழக்குகள், போதிய சாட்சியம் இல்லாததால் விசாரிக்க முடியாது எனக் கூறிக் கைவிடப்பட்டது நம்முள் எத்தனை பேருக்குத் தெரியும்? போலீசுக்கு மாமூல் கொடுக்க மறுத்து வந்த முசுலீம்களின் வியாபார மேலாண்மை தகர்க்கப்பட்டதையும்; குண்டு வெடிப்பு வழக்கில் குற்றவாளிகளாகத் தண்டிக்கப்பட்டிருக்கும் பல முசுலீம்கள் நடைபாதை வியாபாரிகள் என்பதையும் எந்த ஓட்டுக்கட்சிகள், பத்திரிகைகள் அம்பலப்படுத்தியிருக்கின்றன?

மும்பய் வெடிகுண்டு தாக்குதலின் சூத்திரதாரியான தாவூத் இப்ராஹிம் ''ஓடி ஒளிந்து வாழும்'' குற்றவாளியாக ''தடா'' நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டிருக்கிறார். ஆனால், மும்பய் கலவரத்தின் தளபதியாகச் செயல்பட்டதாக, அக்கலவரத்தை விசாரித்த சீறீகிருஷ்ணா கமிசனால் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள சிவசேனாதலைவர் பால் தாக்கரேயை, மும்பய் நீதிமன்றமே வழக்குகளில் இருந்து விடுதலை செய்திருக்கிறது. அவர் கலவரத்தைத் தூண்டிவிடவில்லை என காங்கிரசு கூட்டணி ஆட்சியே நற்சான்றிதழ் வழங்கிவிட்டது. சிறீகிருஷ்ணா கமிசனால் குற்றஞ் சுமத்தப்பட்ட சிவசேனாவைச் சேர்ந்த மதுகர் சர்போத்கர், பா.ஜ.க.வைச் சேர்ந்த கோபிநாத் முண்டே உள்ளிட்ட பல அரசியல் தலைவர்கள் மீது சட்டத்தின் சுண்டு விரல் கூட படவில்லை.



மும்பய் கலவரத்தில் இந்துமதவெறியர்களும், போலீசும் கூட்டாகச் செயல்பட்டதை விசாரணையில் அம்பலப்படுத்திய நீதிபதி சிறீகிருஷ்ணா.

கலவரத்தின் பொழுது ஹரி மசூதிக்குள் போலீசு படையோடு புகுந்து, அங்கு தொழுகை செய்து கொண்டிருந்த ஏழு முசுலீம்களைச் சுட்டுக் கொன்ற நிகில் காப்ஸே என்ற போலீசு துறை ஆய்வாளர் மீது துறைரீதியான நடவடிக்கைக்கூட எடுக்கப்படவில்ல. மாறாக, அந்தத் துப்பாக்கிச் சூட்டில் முதுகுத் தண்டில் சுடப்பட்ட ஃபருக் மாப்கர், கலவரத்தில் ஈடுபட்டதாகத் தன் மீது சுமத்தப்பட்ட பொய் வழக்கிற்காக, கடந்த பதினைந்து ஆண்டுகளாக நீதிமன்றத்திற்கு வந்து போகிறார்.

ஹரி மசூதியில் மும்பய் போலீசார் நடத்திய கொலைவெறியாட்டத்தின் நேரடி சாட்சி பரூக் மாப்கர்.



சுலைமான் பேக்கரி எனும் நிறுவனத்திற்குள் புகுந்து, அங்கு பாதுகாப்பிற்காகப் பதுங்கியிருந்த முசுலீம்களின் மீது கண்மூடித்தனமாகச் சுட்டு, ஆறு பேரைக் கொன்ற ஆர்.டி.தியாகி என்ற போலீசு அதிகாரி, நிரபராதி என விடுவிக்கப்பட்டதோடு, அவர் பதவியில் இருந்து நிம்மதியாக ஓய்வும் பெற்றும் விட்டார்.

சிறீகிருஷ்ணா கமிசன் நிகில் காப்ஸே, ஆர்.டி. தியாகி உள்ளிட்டு 31 போலீசு அதிகாரிகளைக் குற்றவாளிகள் என ஆதாரத்தோடு குறிப்பிட்டுள்ளது. எனினும், அக்காக்கி சட்டை கிரிமினல்கள், பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் மட்டுமல்ல, காங்.கூட்டணி ஆட்சியிலும் வழக்கு-விசாரணை எதுவுமின்றி பாதுகாக்கப்பட்டனர். கலவரம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட 2,300 வழக்குகளில் 1,371 வழக்குகள், மதச்சார்பற்ற காங்கிரசு ஆட்சியில்தான், கலவரம் முடிந்த ஒரு மாதத்திற்குள்ளாகவே, போதிய சாட்சியம் இல்லை என்ற காரணத்தால் கைவிடப்பட்டன.

மகாராஷ்டிரம் இந்து மதவெறியர்களின் செல்வாக்கு மிக்க மாநிலம் என்றாலும், மும்பய் குண்டுவெடிப்பு வழக்கின் தீர்ப்பையடுத்து, மும்பய் கலவர வழக்குகளிலும் நீதி வேண்டும் எனப் பல்வேறு முசுலீம் அமைப்புகளும், சனநாயக சக்திகளும் குரல் எழுப்பி வருகின்றன. தனது மதச்சார்பற்ற முகமூடியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக காங்கிரசு கூட்டணி ஆட்சி, கலவரம் தொடர்பாக நிலுவையில் இருக்கும் வழக்குகளை ஆராய கமிட்டியொன்றை நியமிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

ஆனால், கோவை கலவரம் தொடர்பாக இப்படிப்பட்ட வெற்று அறிவிப்பை வெளியிடக்கூட 'சமூக நீதிக் காவலர்' மு.க.வின் ஆட்சி தயாராக இல்லை; தமிழகமும் வாய்மூடி மௌனம் காக்கிறது. இந்த மௌனத்தை உடைக்காமல், இந்து மதவெறியர்களை வீழ்த்த முடியாது; தண்டிக்கவும் முடியாது!

● வசந்தன்



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு பச்சோந்தியும் சில "கூஜா"க்களும்

# உருட்டல்-மிரட்டலால் உண்மையை மறைக்க முடியுமா?

''அடுத்த தேர்தலில் ஆட்சி: பச்சோந்தி இராமதாசின் பகல் கனவு'' என்ற தலைப்பில் ''புதிய ஜனநாயகம்'' ஆகஸ்டு இதழில் அட்டைப்படச் சிறப்புக் கட்டுரை வெளியிட்டிருந்தோம். அதற்கு, தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் நல்ல வரவேற்பு இருந்தது. ''பாரபட்சமின்றி'' அனைத்து ஓட்டுக் கட்சிகளையும் அம்பலப்படுத்தி வரும் ''புதிய ஜனநாயகம்'', பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் தலைவர் இராமதாசின் சந்தர்ப்பவாத, மோசடி அரசியலை உரிய நேரத்தில் உரிய வகையில் அம்பலப்படுத்தியிருப்பதாகப் பலரும் வரவேற்றுள்ளனர்.

திருவாரூர் மாவட்டம் அம்மையப்பன் என்ற ஊரில் இருந்து முரளி என்ற வாசகர் எழுதியுள்ள கடிதத்தில் தமிழக ஆட்சியாளரின் பச்சோந்தித்தனத்தை அம்பலப்படுத்தி வருவதற்கு மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், இக்கருத்துக்கு நேர்மாறாக சென்னை வடபழனியில் இருந்து கி.ராம் (செட்டியார்) என்பவர், தன்னை ஒரு புதிய ஜனநாயகம் வாசகர், ம.க.இ.க.வைச் சேர்ந்தவர் என்று கூறிக் கொண்டு மிகவும் கீழ்த்தரமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

பு.ஜ. வாசகர் என்றும், ம.க.இ.க. காரன் என்று புளுகிக் கொண்டு வடபழனி கி.ராம் எழுதிய இந்தக் கடிதத்தைப் படித்ததும் ஒரு பழைய நினைவுதான் வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன், பண்ருட்டி இராமச்சந்திரன் பா.ம.க.வின் சட்டமன்ற கட்சித் தலைவராக இருந்தார். அப்போது அவரை விமர்சித்து எழுதியதற்காக, அப்போது இராமதாசு கட்சி நடத்தி வந்த ''தினப்புரட்சி'' நாளேட்டிலும், கடிதம் மூலமாகவும் ''புதிய ஜனநாயகம்'' பத்திரிக்கையாளரைக் கேவலமாக திட்டி எழுதியிருந்தனர். பு.ஜ. அதற்குப் பதிலடியும் எழுதியிருந்தது. பா.ம.க.வினரால் அன்று தாங்கிப் பிடிக்கப்பட்ட ''பண்ருட்டியார்'' பின்னர் என்ன ஆனார், பா.ம.க.வினராலேயே எவ்வளவு தூரம் வசைபாடப்பட்டார் என்பதும், அக்கட்சியினர் இப்போது மறந்து போன சங்கதி.

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு என்ற ஊரில் பு.ஜ. விற்றுக் கொண்டிருந்த இரண்டு தோழர்களை சூழ்ந்து கொண்ட பா.ம.க.காரர்கள் சிலர் இதழ்களைப் பிடுங்கி கிழித்து வீசினர். வேறு சிலரோ தோழர்களின் விளக்கத்துக்குப் பிறகு இதழ்களை வாங்கிச் சென்றனர்.

இப்போது, பா.ம.க. 'பசுமைத் தாயக'த்தின் நிர்வாகிகள் என்று கூறிக் கொண்டு ''புதிய ஜனநாயகம்'' தொலைபேசிக்குத் தொடர்பு கொண்டு உருட்டுவதும், புலம்புவதும், மிரட்டுவதும், வசவு பாடுவதுமாக உள்ளனர்.




''எங்க அய்யாவைப் பத்தி என்னய்யா இப்படி அநாகரிகமாக எழுதியிருக்கீங்க? பத்திரிகைன்னா என்ன வேணாலும் எழுதறதா? மத்த கட்சிக்காரனெல்லாம் பண்ணாததையா எங்கய்யா பண்ணிட்டாரு? எங்க அய்யாவை மட்டும் ஏன் எழுதற? எல்லா விசயத்திலும் மக்களுக்காக எங்கய்யாதான் போராடிக்கிட்டு இருக்காரு, முன்மாதிரியா தொலைக்காட்சி கூட எப்படி நடத்தலாம்னு நடத்திக் காண்பிக்கிறாரு, அவரப்பத்தி இப்படி இழிவு படுத்தி எழுதலாமா?''

இவர்களில் யாருமே அரசியலுக்காக பா.ம.க.வில் உள்ளவர்கள் அல்ல; பிழைப்புக்காக அக்கட்சியில் இருப்பவர்கள் என்பது அவர்கள் எழுப்பும் கேள்விகளில் இருந்தே தெரிகிறது. ''எங்கய்யாவைப் பச்சோந்தின்னு எப்படி எழுதலாம்? மத்த கட்சிக்காரனெல்லாம் யோக்கியமா? ஏன் எங்கய்யாவை மட்டும் எழுதற? பொன்முடிகிட்ட - தி.மு.க. கிட்ட 'சூட்கேசு' வாங்கிக் கிட்டுதானே இப்படி எழுதறே? நேத்து வந்த விஜயகாந்த் எல்லாம் கனவு காண்றப்ப மக்களுக்காக உயிரைக் கொடுத்துப் போராடுற எங்கய்யா கனவு காணக்கூடாதா?'' என்றவாறான இந்தக் கேள்விகளில் எங்காவது அரசியல் இருக்கிறதா? எல்லா ஓட்டுக் கட்சிகளைப் போலத்தான் பா.ம.க.வும் என்று இவர்களின் வாக்குமூலமே அக்கட்சி மற்றும் தலைமையின் யோக்கியதையை வெளிச்சம் போட்டுக் காட்டி விடுகிறது.

இவர்களில் ''புதிய ஜனநாயகம்'' எழுதியுள்ள அரசியல் மீது எந்தக் கேள்வியும் எழுப்புவதற்கு யோக்கியதை உண்டா? நாடாளுமன்றத்துக்கு பா.ம.க. அனுப்பியுள்ள புதுவை எம்.பி.யான இராமதாசு சிறப்புப் பொருளாதார மண்டலங்களை ஆதரித்து, வரவேற்று அங்கே பேசுகிறார். இங்கே இந்த 'ஐயா' இராமதாசு சிறப்புப் பொருளாதார மண்டலங்களை எதிர்த்துப் பேசுகிறார். எது பா.ம.க.வின் நிலை? இதைப் புரிந்து கொள்ளும், கேள்வி கேட்கும் பா.ம.க.காரர்களைத்தாம் அரசியலுக்காக அக்கட்சியில் இருப்பவர்களாகக் கருதமுடியும். அப்படி இல்லாமல் வெறுமனே இராமதாசுக்குத் துதிபாடும் பிழைப்புவாதிகள்தாம் ''புதிய ஜனநாயகம்'' பத்திரிகையை உருட்டி, மிரட்டிப் பார்க்கிறார்கள்.

யார் இந்த இராமதாசு? பா.ம.க.வில் அவருக்கு என்ன பொறுப்பு? தனக்குக் கட்சியில் பதவி வேண்டாம் என்று தியாகியைப் போல நாடகமாடிக் கொண்டே, ஜெயலலிதாவைப் போல யாரோ எழுதித் தரும் அறிக்கைகளுக்கு கையெழுத்துப் போட்டு வெளியிடுவதைத் தவிர கட்சியில் எந்தப் பொறுப்பும் ஏற்காது, அடிமுதல் முடி வரை கட்சிப் பொறுப்பாளர்களை நியமிக்கவும், அவர்களின் விசுவாசத்தை சந்தேகித்தால் தூக்கியடிக்கவும் வாய்ப்புக் கிடைத்தால் அன்பு மகன், மனைவி, மருமகள், பேத்தி எல்லோருக்கும் ''பதவி'' வழங்குவதையும் இவர்கள் கேள்வி கேட்கிறார்களா? ''பத்து நாட்களில் ரிலையன்சு கடைகளை மூடாவிட்டால் இழுத்துப் பூட்டுவோம்'' என்று இராமதாசால் எச்சரிக்கை விடப்பட்ட ரிலையன்சு ஃபிரெஷ் கடைகள் இன்னமும் திறந்தே கிடக்கிறது பா.ம.க வீரர்கள் அங்கே போவார்களா?

**— ஆசிரியர் குழு**


படிப்பகம்

www.padippakam.com

# டாடாவின் டைட்டானியம் ஆலை:

# மண்ணைப் பறித்து முன்னேற்றமா?

**தூ**த்துக்குடி மாவட்டத்தில் 2500 கோடி ரூபாயில் டைட்டானியம் உலோகத்தை உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையை அமைக்க தமிழக அரசுடன் டாடா நிறுவனம் 2007, ஜூன் 28-ஆம் தேதியன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுள்ளது. ஏற்கெனவே 2002-ஆம் ஆண்டிலேயே அன்றைய அ.தி.மு.க. அரசாங்கத்திற்கும் டாடா நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாகியிருந்தது. சாத்தான் குளம், திசையன் விளைப் பகுதிகளில் உள்ள செம்மண் மிகுந்த தேரிக்காடுகளில் என்னென்ன அரிய உலோகங்கள் உள்ளன என சோதனைகளைச் செய்து முடித்த டாடா நிறுவனம், ஆலைக்கான அனுமதிக்கு விண்ணப்பித்து காத்து நின்றது.

அதற்குள் தேர்தல் நடந்து, ஆட்சி மாறிவிடவே இன்றைய அரசுடன் மீண்டும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுள்ளது. இந்த ஒப்பந்தப்படி, முதல் கட்டமாக சுமார் பத்தாயிரத்து ஐநூறு ஏக்கர் நிலங்களை அரசே கையகப்படுத்தி டாடா நிறுவனத்திற்கு வழங்கும்; நிலம் வழங்கியவர்களுக்கு டாடா நிறுவனத்தில் வேலை வழங்கப்படும்; வீடு இழந்தவர்களுக்கு டாடா நிறுவனமே மாற்று வீடுகள் கட்டித் தரும் என்பது ஒப்பந்தத்தின் சாரம்சம்.

அன்று டாடாவுடன் ஒப்பந்தம் போட்ட 'ஜெ' உட்பட ஏறக்குறைய எல்லாக் கட்சிகளும், இன்றைய டாடாவுடனான ஒப்பந்தத்தை எதிர்த்து அறிக்கைகள் விடத் தொடங்கினர். பா.ம.க., போலி கம்யூனிஸ்டுகள் உட்பட அனைவருமே மக்களிடம் கருத்தறிவது எனக் குதிக்கவே, கருணாநிதியும் மக்களின் கருத்தறிந்த பின்பே ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் எனக் கூறி இப்போதைக்கு சிக்கலை ஆறப் போட்டுவிட்டார்.

அருகாமை நெல்லை மாவட்டத்தில் அமெரிக்க கோக்கிற்கு தாமிரவருணியையே விற்றபோது, அதை எதிர்த்து யாரும் போராடவில்லை. போலி கம்யூனிஸ்டுகள் பெயரளவுக்கு எதிர்ப்பு வேசம் கட்டி, சூட்கேசு வந்ததும் ஒதுங்கிக் கொண்டனர். ஏற்கெனவே மே.வங்க மாநிலம் சிங்கூரில் டாடா கார் தொழிற்சாலையை எதிர்த்த விவசாயிகளின் போராட்டம் ஒடுக்கப்பட்டு நாடெங்கும் போலி கம்யூனிஸ்டுகளின் யோக்கியதை நாறுகிறது. கருணாநிதியோ, எதிர்க்கட்சிகளின் இந்த அரசியல் பித்தலாட்டத்தை முறியடிக்க, கருத்துக் கணிப்பு என்று இன்னொரு மோசடியை அரங்கேற்றியுள்ளார்.

தேரிக்காட்டில் கிடைக்கும் இல்மனைட் மணலை எடுத்து, அதை சுத்திகரித்து டைட்டேனியம் டை ஆக்சைடு தயாரிக்கப்படுகிறது. இதிலிருந்து டைட்டேனியம் என்ற ஆற்றல்மிக்க உலோகம் தயாரிக்கப்படுகிறது. இது இரும்பை விட எடை குறைவும், பன்மடங்கு ஆற்றலும் கொண்டது என்பதால் விண்ணூர்திகள், விண்கலங்கள், ஏவுகணைகள் உட்பட பல்வேறு வகைகளில் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இதே தேரிக்காட்டுப் பகுதிகளில் வைகுண்டராஜன் என்பவர் அடாவடியாகவும், சட்டபூர்வ-சட்டவிரோத வழிகளிலும் இல்மனைட் மணலை சுத்திகரித்து மூலப்பொருளாகவே ஏற்றுமதி செய்து வருகிறார். டாடா ஆலை வந்தால், தனது தொழில் பாதிப்படையும் என்பதால் இது வரை சில கோடிகள் செலவு செய்து சுவரொட்டிகள், டிஜிட்டல் பேனர்கள், நாளிதழ்களில் விளம்பரம் என பலவழிகளிலும் மக்களிடையே பயத்தையும் எதிர்ப்புணர்வையும் உருவாக்கி, அரசுக்கு எதிராகவே செயல்பட்டார்.

டாடாவின் எடுபிடியாகச் செயல்படும் தமிழக அரசோ, நேற்று வரை வைகுண்டராஜனின் அடாவடிகளையும் சட்டவிரோத வழிகளையும் அனுமதித்துதான் வந்தது. இன்றோ, பல்வேறு வழக்குகள் போட்டது மட்டுமின்றி 'தாதா' தொழிலதிபர் என பட்டமும் சூட்டி தேடுதல் வேட்டை நடத்துகிறது. பத்திரிக்கைகளோ வழக்கம் போல இவற்றையே லைகுண்டராஜனின் சாதனைகளாக்கி பரபரப்பூட்டுகின்றன. தலைமறைவாயுள்ள வைகுண்டராஜன், தற்போது ஒரு சரணாகதி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

வைகுண்டராஜன் செய்து வந்த வேலையை அரசாங்கமே இப்போது, டாடா செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இதனால் ஏற்கெனவே வறண்டு பாலைவனம் போலுள்ள அந்த தேரிக்காட்டுப் பகுதி முற்றிலும் பாலைவனமாகி, மக்கள் வசிப்பதற்கும் கூட பயனற்றதாக மாறுகின்ற அபாயமே உள்ளது. டாடா நிறுவனம் கூறு

**டைட்டானியம் ஆலை அமைப்பது தொடர்பாக கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பரிமாறிக் கொள்ளும் தரகு முதலாளி ரத்தன் டாடா (வலது) மற்றும் தமிழக முதல்வர் மு. கருணாநிதி.**





படிப்பகம்


www.padippakam.com

வது போல வெறும் 7 மீட்டருடன் மண் ணள்ளுவது நிற்காது. அதற்கும் மேலாக 20, 25 மீட்டர் ஆழம் கூட மணல் அள்ளும் அபாயமுள்ளது. இதனால் சுற்று வட்டாரப் பகுதிகளில் மொத்த நிலத்தடி நீருமே காணாமற் போய், கிராமங்களையே மக்கள் காலி செய்ய வேண்டிய மிகப்பெரும் அபாயம் உள்ளது.

இதுதவிர, டாடாவின் டைட்டேனியம் ஆலைக் கழிவால் சுற்றுச் சூழல் மாசுபடுவதுடன், கடலும் மாசுபடுகின்ற அபாயமுள்ளது. மேலும், டைட்டேனியம்-டை-ஆக்சைடு தயாரிப்புக்கு நாளொன்றுக்கு 4.5 கோடி லிட்டர் தண்ணீர் தேவை. இதற்காக கடல் நீரை சுத்திகரித்து பயன்படுத்தப் போவதாகவும், அந்த சுத்திகரிப்பு ஆலைக்கும் டாடா நிறுவனம் அனுமதி கோரியுள்ளது. சுத்திகரிப்பு ஆலை எப்போது முடியும் என்பது பற்றிய காலம் தீர்மானிக்கப்படவில்லை. அதற்கு முன் உற்பத்தி தொடங்கப்பட்டால், நிச்சயம் தாமிரவருணி ஆற்றுநீரே உறிஞ்சப்படும் அபாயமும் இணைந்துள்ளது.

சுமார் 40 ஆயிரம் குடும்பங்கள் வசித்து வரும் இப்பகுதியில் டாடாவின் ஆலையால் சுமார் ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என அரசு கூறுகிறது. இவை மண்ணின் மைந்தர்க்கே கிடைக்கும் என்பதற்கு எவ்வித உத்திரவாதமுமில்லை. ஏனெனில், ஆலையிலுள்ள வேலைகளுக்கு தொழில்நுட்ப தேர்ச்சி தேவை என்பது ஒரு முன் நிபந்தனை.

40 ஆயிரம் குடும்பங்களை அகதிகளாக்கி, டைட்டேனியம் ஆலை தொடங்கப்பட்டால், டைட்டேனியம் உற்பத்தியில் உலகின் முன்னணி நாடு என்ற பெருமை கிடைக்கலாம். ஆனால் மண்ணையும், வாழ்வுரிமையையும் இழந்து தேரிக்காடுகளையும் விட்டோடுகின்ற மக்களின் அவலம் டாடா எனும் தனியொரு முதலாளியை மட்டும் வாழவைப்பதற்குத்தான் என்பதை சொரணையுள்ள யாரும் ஏற்க முடியாது.





**டைட்டானியம் ஆலை அமைப்பது தொடர்பாக சாத்தான்குளம் பகுதி மக்களிடம், ஆலையை ஆதரிக்கும் தமிழக அரசும் (மேலே), ஆலையை எதிர்க்கும் பா.ம.க. நிறுவனர் ராமதாசும் தனித்தனியாக நடத்திய கருத்து கேட்பு அரசியல் நாடகங்கள்.**

ஏற்கெனவே சுற்றுச்சூழலை நாசமாக்கும் ஸ்டெர்லைட் ஆலைக்கெதிராக ஓட்டுக் கட்சிகள் சூரத்தனம் காட்டின. சூட்கேசும் அன்பளிப்பும் வந்த பின் முடங்கிப் போயின. மக்களுக்கு பாதிப்பு வராது, வந்தால் டாடா நிறுவனம் மாற்றீடு செய்யும் என புரிந்துணர்வு ஒப்பந்தம் கூறுகிறது. ஏற்கெனவே நெய்வேலி சுரங்கத்திற்கு நிலமளித்தவர்களும் கூடங்குளம் அணுமின்நிலைய திட்டத்திற்கு நிலமளித்தவர்களும் இந்த அரசாலேயே புறக்கணிக்கப்படுள்ளனர். மக்களுக்கு பதில் கூற பொறுப்புள்ள அரசாங்கமே மக்களை நிர்கதியாக வீதிக்கு விரட்டும் போது, லாப வெறி பிடித்த டாடா நிறுவனம் உரிய மாற்றீடு செய்யும் என்பதற்கும் எவ்வித உத்திரவாதமுமில்லை.

டாடாவா, வைகுண்டராஜனா என்ற போட்டியில் அப்பகுதி மக்கள் மண்ணிலிருந்தே விரட்டப்படும் அபாயம் முதன்மையாக உள்ளது. மக்கள் தமது மண்ணையும் வாழ்வுரிமையையும் பாதுகாக்க ஓட்டுக் கட்சிகளை நம்பினால் அது மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்கிய கதையாகவே முடியும். மூலவளங்களையே சூறையாடும் தனியார்மயக் கொள்கைக்கு எதிராக புரட்சிகர அமைப்புகளின் தலைமையிலான போராட்டத்திற்கு அணிதிரள்வதே மண்ணையும் வாழ்வுரிமையையும் மீட்கும் பாதை! டாடாவை விரட்டும் பாதை!

• முத்து



படிப்பகம்

www.padippakam.com

## "காற்றுப் புகமுடியாத இடத்திலும் கம்யூனிஸ்டுகள் நுழைவார்கள்"

# தனியார் பேருந்து ஓட்டுநர்கள் சங்கம் உதயம்

"கல்லூரி நிர்வாகம் 'பறக்கும் படை' என்ற பெயரில் ஒரு குண்டர் படையை வைத்திருக்கிறது. போராடும் மாண வர்களை 'டார்க் ரூம்' எனப்படும் கொட்டடியில் அடைத்து வைத்து ஆபாச வசவுகளுடன் காட்டுமிராண்டித்தனமாக அக் குண்டர்கள் அடிப்பார்கள்" என்று கடந்த 2006-ஆம் ஆண் டில் ஜேப்பியாரின் சத்யபாமா நிகர்நிலைப்பல்கலைகழக மாணவர்கள் முகத்தைக் கைக்குட்டையால் மறைத்துக் கொண்டு தொலைக்காட்சிகளுக்கு பேட்டியளித்ததையும், ஜேப்பியாரின் உருட்டல்-மிரட்டல்களால் மனமுடைந்த மாணவர் ராபின்வாஸ் தற்கொலை செய்து கொண்ட அவலத் தையும் தமிழக மக்கள் மறந்திருக்க முடியாது.


பல்லாயிரக் கணக்கில் பணத்தைக் கொட்டியழுது உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கே இந்த கதி என்றால், இம் மாணவர்களைப் பேருந்துகளில் அழைத்துவரும் ஜேப்பி யார் கல்லூரிகளின் பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் பிற தொழி லாளர்களின் நிலை பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.


"கல்வித் தந்தை" ,"வள்ளல்" என்றெல்லாம் தனது எடு பிடிகளை வைத்து தனக்குத்தானே பட்டமளித்துக் கொண்டு சுய இன்பம் காணும் ஜேப்பியாரின் கல்வி நிறுவனங்களில் பேருந்து ஓட்டுநர்கள், மெக்கானிக்குகள், கிளீனர்கள், துப்புர வுப் பணியாளர்கள், உணவு விடுதிப் பணியாளர்கள் என ஏறத்தாழ 400-க்கும் மேற்பட்டோர் நீண்ட காலமாக வேலை செய்து வருகின்றனர். இவர்கள் எந்த உரிமையுமற்ற அடிமை களாகவே நடத்தப்பட்டனர். ஜேப்பியார் வைத்ததுதான் சட் டம்; இட்டதுதான் நீதி. காரணமே இன்றி தொழிலாளிகளை வேலையிலிருந்து நீக்குவது, கல்லூரி நுழைவாயிலில் மணிக் கணக்கில் கால்கடுக்க நிற்க வைத்து தண்டிப்பது, ரௌடி யைப்போல பாய்ந்து வந்து பளாரென அறைந்து எட்டி உதைப்பது – என ஜேப்பியாரின் அட்டூழியங்களுக்கு எல் லையே கிடையாது. இரவு பகலாக உழைக்கும் இத்தொழி லாளர்களுக்கு, மாணவர்களும் ஆசிரியர்களும் சாப்பிட்டு முடித்தபின் எஞ்சியிருக்கும் உணவுதான் அரைகுறையாகத் தரப்படும். அதுவும் கூட பலருக்குக் கிடைக்காமல் பட்டினி கிடக்க நேரிடும்.

குமுறிக் கொண்டிருந்த தொழிலாளர்களை சங்கமாக அணிதிரட்டிப் போராட எந்த ஓட்டுக்கட்சியும் முன்வர வில்லை. ஏனெனில், எல்லா ஓட்டுக்கட்சிகளுக்கும் புரவல ராக இருப்பவர் ஜேப்பியார். 'கேப்டன்' விஜயகாந்த் ஜேப்பி யாரின் காலில் விழுகிறார். வலது கம்யூனிஸ்டுகள் "ஜன சக்தி" நாளேடுக்கு ஜேப்பியாரிடமிருந்து கணிப்பொறிகளை அன்பளிப்பாகப் பெறுகின்றனர். தலித்தியம் பேசும் சிவ காமி ஐ.ஏ.எஸ். கருத்தரங்கம் நடத்த, தனது கல்வி நிறுவன அரங்கத்தில் ஜேப்பியார் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார். பா.ம.க.வினர் மாநாடு நடத்த ஜேப்பியாரிடமிருந்து இலவச வாகன வசதி அளிக்கப்படுகிறது. இதர கட்சிகளின் மேல்மட் டங்களுக்கு உரிய முறையில் உபசரிப்புகளும் சிறப்பு செய்த லும் நடக்கின்றன.

எனவேதான்,வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் ஓட் டுக் கட்சிகளைப் புறக்கணித்துவிட்டு, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் வழிகாட்டுதலில் சங்கமாக அணிதிரளத் தொடங்கினர். பீதியடைந்த நிர்வாகம், வெற்றிவேல் செழியன் என்ற முன்னணி ஊழியரை திடீரென வேலை நீக்கம் செய்து பழிவாங்கியது. இந்த அச்சுறுத்தலைக் கண்டு சோர்வடையாமல், நம்பிக்கையோடு செயல்பட்ட தொழிலாளர்கள், அனைவரையும் சங்கத்தில் உறுப்பினர் களாக்கி "புதிய ஜனநாயக வாகன ஓட்டுநர்கள் மற்றும் டெக் னீசியன்கள் சங்கம்" என்ற பெயரில் சங்கத்தைப் பதிவு செய்து அதை பு.ஜ.தொ.மு.வுடன் இணைத்துக் கொண்டனர். பழிவாங்கப்பட்ட வெற்றிவேல் செழியனின் வேலை நீக்கம் சட்டப்படி செல்லாது என தொழிலாளர்துறை ஆணையரிடம் வழக்கு தொடுத்தனர். இதைத் தொடர்ந்து, ஒப்பந்ததாரர்கள் மூலம் கல்லூரிப் பேருந்துகளை இயக்க ஜேப்பியார் முயற் சிக்க, அதற்கெதிராக சங்கத்தின் மூலம் போராடி நீதிமன்றத் தடையாணையும் பெற்றுள்ளனர்.

அரண்டுபோன ஜேப்பியார், அனைத்து ஓட்டுநர்களை யும் அழைத்து, "சங்கத்திலிருந்து விலகி விடுங்கள்; உங்களு டைய எல்லா கோரிக்கைகளையும் நிறைவேற்றுகிறேன்" என்று நைச்சியமாகப் பேசிப்பார்த்தார். சங்கத்திலிருந்து விலகிவிட்டதாக எழுதிக் கொடுத்தால் ரூ.25,000 கடன்






படிப்பகம்

www.padippakam.com

தருவதாக அறிவித்துப் பார்த்தார். சங்கமாக அணிதிரண்ட தால்தான் இந்தக் கல்விக் கொள்ளையர் இப்படி இறங்கி வரு கிறார் என்பதை உணர்ந்த தொழிலாளர்கள், ஜேப்பியாரின் பசப்பல்களை உதாசீனப்படுத்தி உறுதியாக நின்றனர். பின்வாங்கிய நிர்வாகம், இப்போது சில ஆரம்ப கோரிக்கை களை நிறைவேற்றியுள்ளது. இதைக் கண்டு உற்சாகமடைந்த ஜேப்பியாரின் செயிண்ட் ஜோசப் கல்லூரி, ஜேப்பியார் பொறியியல் கல்லூரி ஆகியவற்றில் பணியாற்றும் தொழி லாளர்களும் ஓம்சக்தி டிராவல்ஸ் நிறுவனத்தின் தொழி லாளர்களுமாக நூற்றுக்கும் மேற்பட்டோர் இச்சங்கத்தில் இணைந்துள்ளனர். இதுதவிர, ஜேப்பியாரின் சத்யபாமா பல் கலைக் கழகத்தில் கொத்தடிமைகளைவிடக் கேவலமாக நடத் தப்பட்டு வந்த 200-க்கும் மேற்பட்ட துப்புரவுத் தொழி லாளர்கள் தங்களது உரிமைகளை மீட்டெடுக்க இச்சங்கத்தில் அணிதிரண்டுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக கடந்த 12.08.07 அன்று மாலை சத் யபாமா பல்கலைக் கழகம் முன்பாக, செம்மஞ்சேரியில், சங் கக் கொடியேற்றி அலுவலகத் திறப்பு விழாவும் பொதுக் கூட் டம்- கலை நிகழ்ச்சியும் நடைபெற்றன. பெயருக்கேற்ப செம் மஞ்சேரி அன்று செங்கொடிகளாலும் செஞ்சட்டை அணிந்த தொழிலாளர்களாலும் பெருமிதத்தோடு குலுங்கியது. பு.ஜ. தொ.மு. தலைவர் தோழர் முகுந்தன் மற்றும் பொதுச்செயலர் தோழர் சுப. தங்கராசு ஆகியோர் சங்கக் கிளைகளின் கொடி யேற்ற, சங்க நிர்வாகிகள் அலுவலகம் மற்றும் பெயர்ப் பலகைகளைத் திறந்து வைக்க, அதைத் தொடர்ந்து நடந்த பொதுக்கூட்டத்தில் முன்னணியாளர்களும் தோழமை அமைப்பினரும் வாழ்த்துரை வழங்கினர். ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி போராட்ட உணர் வுக்குப் புதுரத்தம் பாய்ச்சியது. நாவலூர், சோழிங்கநல்லூர், செம்மஞ்சேரி ஆகிய ஊர்களின் முக்கிய பிரமுகர்களும் குறிப்பாக பஞ்சாயத்துத் தலைவர் திரு. தனசேகர், ஒப்பந்த தாரர் திரு. கருணாகரன் ஆகியோரின் பேராதரவோடும் நடந்த இந்த இந்நிகழ்ச்சியில் திரளாக உள்ளூர் உழைக்கும் மக்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர். பணபலம், குண்டர்பலம், சர்வகட்சி ஆதரவு என கொட்டமடிக்கும் ஜேப்பியார் கல்லூரி களில் துணிந்து உறுதியாக நின்று தொழிற்சங்கம் நிறுவப்பட் டுள்ளதை வியந்து பாராட்டி , இன்னும் பல கல்லூரிகளின் தொழிலாளர்கள் சங்கமாக அணிதிரளத் தொடங்கியுள்ளனர்.

*ஓங்கட்டும் தொழிலாளி வர்க்க ஒற்றுமை!*

**தகவல்: புதிய ஜனநாயக வாகன ஓட்டுநர்கள்**
**மற்றும் டெக்னீசியன்கள் சங்கம்.**

# சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு எதிராக ஓசூர் விவசாயிகளின் போராட்டம்!

ஓசூரை அடுத்துள்ள கெலமங்கலம், பைரமங்கலம், குண்டுமாரனப்பள்ளி, ஒன்னல்வாடி, அஞ்செட்டிப் பள்ளி, சனமாவு, அக்கொண்டப்பள்ளி உள்ளிட்ட கிராமங்களின் விளைநிலங்களைப் பறித்து 3640 ஏக்கர் பரப்பளவில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும் என தமிழக அரசு ஏற்கெனவே அறிவித்திருந்தது. தமிழக அரசின் டிட்கோ நிறு வனமும் ஜி.எம்.ஆர். குழுமம் என்ற தனியார் நிறுவனமும் இணைந்து இம்மண்டலத்தை உருவாக்குவதற்கான புரிந்து ணர்வு ஒப்பந்தம் கடந்த ஆகஸ்ட் 6-ஆம் தேதியன்று தமிழக முதல்வர் முன்னிலையில் கையெழுத்தாகியுள்ளது.

"லிட்டில் இங்கிலாந்து" என்று வெள்ளைக்காரர்களால் காலனியாட்சிக் காலத்தில் அழைக்கப்பட்ட இப்பகுதி, கிருஷ் ணகிரி மாவட்டத்தில் ஓரளவுக்கு செழிப்பான பகுதியாகும். இங்கு பெருமளவில் விளையும் வாழை, முட்டைக்கோஸ், உருளை, பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகள் சென்னை, பெங்க ளூர் முதலான பெருநகரங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இத்தகைய வளமான விளைநிலங்களையும் விவசாயிகள் வாழ்வுரிமையையும் பறித்துவிட்டு, இங்கு சிறப்புப் பொருளா தார மண்டலம் அமைக்கத் துடிக்கிறது தி.மு.க. அரசு.

இப்பகுதியில் சிறப்புப் பொருளா தார மண்டலம் நிறு வப்படுவதற்கான அறிவிப்பு வெளி யான நாளிலிருந்து, ஏறத்தாழ ஓராண்டு காலமாக, இப்பகுதி யில் இயங்கிவரும் வி.வி.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் தொடர்ந்து பல் வேறு வடிவங்க ளில் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு விவசாயிகளிடம் விழிப்புணர்வூட்டி வந்தன. தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானதும் இக்கிராமங்களில் வீச்சாகப் பிரச்சா ரத்தை மேற்கொண்டு விவசாயிகளை அணிதிரட்டின. இப்பி ரச்சாரத்தால் உந்தப்பட்ட விவசாயிகள் தன்னெழுச்சியாகத் திரண்டு கடந்த 17.8.07 அன்று அக்கொண்டப்பள்ளியில் திடீர் சாலை மறியல் போராட்டத்தை நடத்தினர். விவசாயிகள் ஒப்புதலின்றி நிலங்களைக் கையகப்படுத்த மாட்டோம் என்று வட்டாட்சியரும் காவல்துறை கண்காணிப்பாளரும் போராடும் மக்களை சமரசமப்படுத்த முயற்சித்தனர்.

இந்தப் பசப்பல்களை ஏற்க மறுத்த இப்பகுதிவாழ் விவசா யிகள் 23.8.07 அன்று விவசாய நிலங்களை தர மறுப்பதாக வும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை எதிர்ப்பதாகவும் அறிவித்து ஆர்ப்பாட்டப் பேரணியாகச் சென்று மாவட்ட ஆட் சியரிடம் மனு கொடுத்தனர். விவசாயிகளின் விழிப்புணர் வையும் போராட்டத்தையும் கண்டு அரண்டு போன அதிகார வர்க்கமும் போலீசும், 'தொழில் வளர்ச்சி பெருகும்; 70 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும்' என்றெல்லாம் புளுகி எதிர்ப் பிரச்சாரத்தில் இறங் கியுள்ளது. இவற்றை அம்பலப்படுத்தி முறியடிக்கவும், சிறப்புப் பொருளா தார மண்டலத்தை விரட்டியடிக்கவும் வி.வி.மு.வினர் விவ சாயிகளை அணி திரட்டிவருகின்றனர்.



— விவசாயிகள் விடுதலை முன்னணி, கிருஷ்ணகிரி மாவட்டம்.


படிப்பகம்

www.padippakam.com

# உ.பி.:
# தலித்திய ஆட்சி பார்ப்பனிய நீதி

உத்தரப் பிரதேசத்தில் பார்ப்பனர்களுடன் கூட்டணி கட்டிக் கொண்டு மாயாவதி ஆட்சியைப் பிடித்து சிறிது காலம்தான் ஆகியுள்ளது. அதற்குள்ளாகவே இந்த சந்தர்ப்பவாதக் கூட்டணியின் சாயம் வெளுக்கத் தொடங்கி விட்டது. தலித் ஒருவர் ஆளுவதனாலேயே தலித் மக்கள் வாழ்வில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டு விடும் என்ற பிரச்சாரம் பொய்த்துப் போயுள்ளதோடு, தலித் இளைஞர் ஒருவரை அடித்துக் கொன்ற பார்ப்பன சாதி வெறியர்களைச் சட்டத்தின் பிடியில் இருந்து தப்புவிக்க மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியே துணைபோகும் கொடுமையும் அங்கு நடந்தேறியுள்ளது.

கிழக்கு உத்தரப் பிரதேசத்தின் பிரதாப்கார் மாவட்டத்தில் இருக்கும் பாதேவெரா எனும் சிற்றூரின் தலித் குடியிருப்பை சேர்ந்தவர், 21 வயது நிரம்பிய சக்ராசென் கவுதம். சாமர் எனும் தலித் சாதியை சேர்ந்த சக்ராசென் பி.ஏ. பட்டம் முடித்து, எப்படியாவது முன்னேறிவிட வேண்டும் எனும் முயற்சியில் ரயில்வே உள்ளிட்ட அனைத்து போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பித்துக் கொண்டும், ஆங்கிலப் பேச்சாற்றலை வளர்த்துக் கொண்டும் இருந்தார். சிறுவயதிலேயே தன் தந்தையை இழந்து விட்ட சக்ராசென்னையும் அவரது இரு சகோதரர்களையும் அவர்களின் தாத்தா, சிவ்மூர்த்திதான் படிக்க வைத்து வந்தார்.

2004-இல் அவ்வூரின் பஞ்சாயத்து தலைவராக தலித் ஒருவர் இருந்த போது, ரேசன் கடை நடத்தும் உரிமையை இவர்களின் குடும்பத்திற்கு வழங்கி இருந்தனர். தலித் சேரியின் அண்மையில் இருக்கும் பார்ப்பன குடியிருப்பை சேர்ந்த சந்தோஷ் மிஸ்ரா, தான் நடத்தி வரும் கடையில் சந்தை விலைக்கு விற்று லாபமீட்டுவதற்காக, சிவ்மூர்த்தி, தனது ரேஷன் கடையில் இருந்து அதிக அளவில் ரேசன் பொருட்களைத் தந்தாக வேண்டுமென நிபந்தனை விதித்தார். இதற்கு உடன்பட சிவ்மூர்த்தி மறுத்து விடவே சந்தோஷ் மிஷ்ரா, இந்த தலித் குடும்பத்தினர் மீது வன்மம் கொண்டிருந்தார்.மேலும், தலித் இளைஞரான சக்ராசென் உயர்கல்வி கற்றுள்ளதைக் கண்டு பொறாமையும் ஆத்திரமும் கொண்டிருந்தார்.

**பார்ப்பன-தாக்குர் சாதிவெறியர்களால் அடித்தே கொல்லப்பட்ட தலித் இளைஞர் சக்ராசென் கவுதம்.**



பத்து மாதங்களுக்கு முன்பு கூட மிஸ்ரா, ''உங்கள் பேரனை அதிகம் படிக்க வைத்து விட்டீர்கள். ஆனாலும் அவனால் உங்களுக்கு எந்த பிரயோசனமும் இருக்கப் போவதில்லை, பாருங்கள்!'' என்று சக்ராசென்னை ஒழித்துக் கட்ட இருப்பதாக சிவ்மூர்த்தியிடம் மிரட்டி இருக்கிறார். உடனடியாக இது குறித்து மாவட்ட ஆட்சியர், காவல்துறைக் கண்காணிப்பாளர் மற்றும் உள்ளூர் போலீசிடம் புகார் கொடுக்கப்பட்டதால் மிஸ்ரா விசாரணைக்காக கைது செய்யப்பட்டார். உடனே உள்ளூர் தாக்குர்கள் (ஆதிக்க சாதியினர்) சிவ்மூர்த்தியிடம் 'இது உள்ளூர் விசயம். நமக்குள் பேசித் தீர்க்கலாம்' என்று கூறி புகாரை திரும்பப் பெற வைத்தனர். ஆயினும், அவரின் பேரன் உயிருக்கிருந்த ஆபத்து நீங்கி விடவில்லை. ''உங்களை ஒருபோதும் மன்னிக்க மாட்டேன்'' என்றும் ''ஒழித்துக்கட்டுவேன்'' என்றும் பார்ப்பன மிஸ்ரா பகிரங்கமாக மிரட்டிக் கொண்டிருந்தார்.

கடந்த ஜூலை 30-ஆம் நாள் இரவு அலகாபாத்தில் இருந்து ஊர் திரும்பிய சக்ராசென் கவுதம், வழக்கம்போல மறுநாள் அதிகாலையில் ஓட்டப்பயிற்சி செய்ய வீட்டை விட்டுக் கிளம்பிச் சென்றார். அவரை இன்னொரு தலித்தான இந்திரஜித் பாஸ்வான் என்பவரின் வீட்டில் வைத்து கட்டிப் போட்டு ஒரு கும்பல் அடித்து உதைத்துக் கொண்டிருக்கும் தகவலை அறிந்த சக்ராசென்னின் தாத்தாவும் தம்பியும் விரைந்து சென்று பார்த்த போது, இரத்த வெள்ளத்தில் கிடந்த சக்ராசென்னுக்கு உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது.

''பாஸ்வானின் குடிசைக்கு நீ எப்

**இச்சாதிவெறிப் படுகொலைக்குப் பழிதீர்ப்பது எப்போது? மாளாத் துயரத்தில் சக்ராசென்னின் இறுதி ஊர்வலம்.**




படிப்பகம்

www.padippakam.com

படி வந்தாய்?'' என அவர்கள் கேட்டதற்கு, சந்தோஷ் மிஸ்ரா மற்றும் ஆகாஷ் துபே ஆகிய இரு பார்ப்பனர்களின் பெயர்களை உச்சரித்து விட்டு குற்றுயிராய்க் கிடந்த சக்ராசென் மரணமடைந்தார். கொலையாளிகள் இருவரும் தலைமறைவானார்கள். போலீசோ பாஸ்வானையும் அவரின் இரு சகோதரர்களையும் கைது செய்துவிட்டு, 4 ஆண்டுகளுக்கு முன்னரே இறந்து விட்ட இன்னொரு தலித்தைக் குற்றவாளிப் பட்டியலில் சேர்த்துள்ளது.

கொலைகார பார்ப்பனர்களைக் கைது செய்யவிடாமல் உள்ளூர் பகுஜன் சமாஜ் கட்சி எம்.எல்.ஏ.வான ராம் ஷிரோன்மணி சுக்லா தடுத்து வருகிறார். பார்ப்பன சாதியை சேர்ந்த ஆளும்கட்சி எல்.எல்.ஏ.வான இவருக்கு, கொலையாளிகள் இருவரும் நெருங்கிய கூட்டாளிகள் மட்டுமல்ல; ஒரே சாதியையும் சேர்ந்தவர்கள்.

5 லட்ச ரூபாய் தருவதாயும், இரண்டு பார்ப்பனர்கள் மீதான புகார்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இந்த எல்.எல்.ஏ. பேரம் பேசியுள்ளார். சக்ராசென் கவுதமின் குடும்பமோ கொல்லப்பட்ட சக்ராசென்னின் உடலை காரில் கொண்டு சென்று மாயாவதி வீட்டு முன் வைக்க முயன்றது. ஆனால் சுக்லாவும் போலீசாரும் கார் ஓட்டுநரை மிரட்டி இதனைத் தடுத்து விட்டனர். கொலையாளிக்கு பகுஜன் சமாஜ் கட்சி எம்.எல்.ஏ.வே உதவுகிறார் என்பதை அம்மாவட்ட பகுஜன் சமாஜின் தலைவராக இருக்கும் தலித் ஒருவரிடம் சென்று சக்ராசென் குடும்பத்தார் முறையிட்டனர். தலித்தாக இருந்தாலும் அவரோ அந்த ''சட்டமன்ற உறுப்பினர், அவரின் சாதிக் கடமையைச் செய்யத்தானே செய்வார்'' என்று சாதி வெறியர்களுக்கு வக்காலத்து வாங்கியுள்ளார்.

இக்கொலைக்குப் பின்னர் அந்த வட்டாரத்தில் இருக்கும் பார்ப்பன சங்கமான 'பிராமண சகோதரத்துவக் குழு'வுக்கு புதுத்தெம்பு பிறந்து விட்டது. பாதேவெரா கிராமத்தின் தலித் சேரியைச் சுற்றி வந்து நக்கலான முழக்கம் ஒன்றை அக்கும்பல் முழக்கிச் செல்கின்றது. ''பிராமணர்கள் சங்கு ஊதட்டும்... பகுஜன் சமாஜிகள் தில்லிக்கு செல்லட்டும்'' என்பதே அந்த முழக்கம்.

சக்ராசென் கொலை செய்யப்பட காரணம், அவர் தலித் என்பதால் மட்டுமல்ல; சுயமரியாதையோடு படித்து முன்னேறத் துடித்த தலித் இளைஞர் என்பதால்தான் அவர் கொல்லப்பட்டுள்ளார். இந்த உண்மை ஒருபுறமிருக்க, தலித் ஒருவர் முதல்வராக இருந்து ஆட்சி செய்தாலும், இன்றைய அரசியலமைப்பு முறையின் மூலம் சாதிவெறிக் கொடுமைகளை ஒழிக்க முடியாது என்பதையும் தனது உயிர்த்தியாகத்தின் மூலம் உறுதி செய்திருக்கிறார், சக்ராசென்.

ஆனால், பகுஜன் சமாஜின் பார்ப்பனக் கூட்டை சாதி ஒழிப்புக் குரிய போர்த்தந்திரமாகக் கருதி பல அறிவாளிகளும் அரசியல் விற்பன்னர்களும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருக்கின்றனர். தலித்களும் பிற சாதி உழைக்கும் மக்களும் ஒன்றுபடாமல் வெறுமனே ஓட்டுப் பொறுக்கித் தலைவர்களிடையேயான கூட்டணியால் தலித்கள் விடுதலையை வென்றெடுக்கலாம் என்பதும், பார்ப்பனர்களுடனான கூட்டணி தலித்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தி விடும் என்பதும் எவ்வளவு மோசடியானது என்பதை மாயாவதியின் தலித்திய ஆட்சியே நிரூபித்துக்காட்டிவிட்டது.

• இரணியன்

# ''நாய் நுழையும் கோவிலுக்குள் நாங்கள் நுழையக்கூடாதா?''

## — தாழ்த்தப்பட்ட மக்களின் வழிபாட்டு உரிமையை நிலைநாட்ட வி.வி.மு. ஆர்ப்பாட்டம்

விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் அருகேயுள்ள அகரம் என்கிற குலதீபமங்கலம் கிராமத்திலுள்ளது தர்மராஜா - திரௌபதையம்மன் கோவில். அரசுக்குச் சொந்தமான இப் பொதுக்கோவிலில் வழிபடச் சென்ற தாழ்த்தப்பட்ட மக்களைத் தடுத்து தாக்கி வெறியாட்டம் போட்டுள்ளனர், வன்னியர் - உடையார்சாதிவெறியர்கள்.

வருடந்தோறும் தேரோட்டத்தை மையப்படுத்தி உருவாகி வந்த பிரச்சினை, இவ்வாண்டு தாழ்த்தப்பட்டோர் தேருக்கு மாலைபோட்டு வழிபடும் உரிமையையே பறிக்கும் வகையில் முற்றிவிட்டது. தேர் ஊர்வலப் பாதுகாப்புக்காக வந்த போலீசார், ஊர்வலத்தன்று நள்ளிரவில் சாதிவெறியர்களால் தாழ்த்தப்பட்டோர் தாக்கப்பட்டதைத் தடுக்கவில்லை. சாதிவெறியர்களைக் கைது செய்யக்கோரி சாலை மறியல் செய்த தாழ்த்தப்பட்டோரை, 144 தடையுத்தரவு பிறப்பித்து விரட்டியடித்தனர். கோயிலும் பூட்டப்பட்டு ''சீல்'' வைக்கப்பட்டது. அதன் பிறகு முகையூர் எம்.எல்.ஏ.வான கலியவரதன் தலைமையில் திரண்ட வன்னிய சாதிவெறியர்கள் அரசு பூட்டுப் போட்டு வைத்த ''சீலை'' உடைத்து வெறியாட்டம் போட்டபோதும் அரசு கைகட்டி நின்றது. தாழ்த்தப்பட்டோர் கோயிலில் வழிபடும் உரிமையையும் மறுத்து வருகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களின் வழிபாட்டு உரிமையை மறுத்து கொட்டமடிக்கும் சாதிவெறியர்களை எதிர்த்து, தொடர்ந்து இப்பகுதியில் பிரச்சாரம் செய்த வி.வி.மு., அதன் தொடர்ச்சியாக 13.8.07 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. தாழ்த்தப்பட்டோரின் வழிபாட்டு உரிமையை நிலைநாட்டக்கோரி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் குலதீபமங்கல கிராம மக்கள் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

இதைத் தொடர்ந்து 27.8.07-க்குள் தாழ்த்தப்பட்டோர் கோவிலுக்குச் சென்று வழிபட அரசு உரிய ஏற்பாடு செய்யும் என்று மாவட்ட வருவாய்த்துறை ஆணையர் உத்தரவிட்டுள்ளார். ஆனாலும், சாதிவெறியர்கள் இதை நீர்த்துப் போக வைத்து, தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட எல்லாவகையான சதிகளிலும் இறங்கியுள்ளனர். இதற்கெதிராக தாழ்த்தப்பட்டோரை அணிதிரட்டிவரும் வி.வி.மு. அடுத்தகட்ட போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகிறது.




படிப்பகம்

### சட்டங்கள், ஆணையங்கள், நடுவர்மன்றங்கள், திட்டங்கள்...

# அரசு தோட்டத்தில் விளைந்து கிடக்கும் ஏட்டுச் சுரைக்காய்கள்

**இந்தியாவின் மத்திய, மாநில ஆட்சியாளர்கள் அடுக்கடுக்கான பல சமூக நீதிச் சலுகைகளும், சமூக நலத் திட்டங்களும், மக்கள் உரிமைச் சட்டங்களும் கொண்டு வந்து நிறைவேற்றுவதாகக் கூறிக் கொள்கிறார்கள். ஆனால், இவையெல்லாம் எதனால் கொண்டு வரப்படுகின்றன, இவை எந்த அளவு நிறைவேற்றப்படுகின்றன, இவற்றால் என்னென்ன பயன்கள் விளைந்திருக்கின்றன என்று அலசும் தொடரின் இறுதிப் பகுதி.**

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு எதிரான சமீபகால வன்கொடுமைகளைப் பார்க்கும்போது, அவை தன்மையிலும் செய்யும் முறையிலும் பெருமளவு மாற்றமடைந்து வருகின்றன என்று தெரிகிறது. பொருளாதார-தொழில் முன்னேற்றத்துக்கு ஏற்ப சாதிய உணர்வும் வெறியும் மங்கி வருவதற்குப் பதிலாக, சமூகத்தில் சாதிய முரண்பாடுகள் முன்பைவிட மிக வேகமாக வளர்ந்து வருவதையே காண முடிகிறது. இப்போது சாதிய அட்டூழியங்கள் சாதியுணர்வின் ஒன்றுதிரண்ட, கொடூர வெளிப்பாடாகியிருக்கின்றன. சாதியுணர்வு சாதிவெறியாகி மேலும் கொடூரமான வடிவங்கள் எடுத்திருக்கின்றன. அதாவது, தன்மையிலும் செய்யும் முறையிலும் பெருமளவு மாற்றங்கண்டு வருகின்றன.

கடந்த காலத்தில் பெருமளவு தனிமனிதர்களாகவே தாழ்த்தப்பட்ட மக்கள்மீது ஆதிக்க சாதியினர் வன்கொடுமைகளைச் செய்து வந்தார்கள். ஆனால், இப்போது பலர் குழுக்களாகச் சேர்ந்து ஒரு வீர விளையாட்டு நடத்துவது போலவோ, ஒரு விழாவில் பலியிடுவது போலவோ வன்கொடுமைகள் செய்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட-பழங்குடி மக்களுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுப்பதற்காக எந்த அரசு அதிகார அமைப்புகளிடம் கூடுதலான பொறுப்புகள், அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனவோ, அதே அரசு அதிகார அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் அம்மக்கள்மீது தாக்குதல் நடத்துவதும் அதிகரித்து வருகிறது. பல சம்பவங்கள் போலீசின் கண்முன்னே நடந்தும் கூட ஆதிக்க சாதிகளுக்கு உடந்தையாகத்தான் போலீசு அமைப்பு செயல்பட்டிருக்கிறது; வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதோடு, வன்கொடுமைகள் புரிந்தவர்களுக்குச் சாதகமாக வழக்குகளைப் பதிவு செய்கிறது; அவ்வாறே வழக்குகளையும் விசாரணைகளையும் நடத்துகிறது.

தமிழ்நாட்டில் நடந்த மேலவளவு படுகொலைக் குற்றவாளிகள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கவோ, அச்சட்டத்திற்குரிய சிறப்பு விசாரணை அமைப்புகள் நிறுவப்படவோ, சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படவோ இல்லை. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விரைவிலேயே பிணையில் வந்து குற்றம் நிகழ்ந்த இடத்தில் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்து, சாட்சிகள் உட்பட கிராமத் தலித்துகளை நேரடியாக மிரட்டினர். குற்றவாளிகள் பலர் தண்டனைகளில் இருந்து விடுவிக்கப்பட்டதோடு, மரண தண்டனை மற்றும் நீண்டகால கடும் சிறைத்தண்டனைகள் யாருக்கும் விதிக்கப்படவில்லை. தண்டனை விதிக்கப்பட்டவர்கள் கூட மேல்முறையீடு செய்துவிட்டு பிணையில் வந்து சாதி ஆதிக்கத் திமிரோடு அலைய அனுமதிக்கப்பட்டனர். வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும், குறைவான தண்டனை பெற்றவர்களுக்கும் எதிராக அரசு தரப்பில் மேல் முறையீடு செய்யவுமில்லை.

**கயர்லாஞ்சிப் படுகொலையைச் செய்த மேல்சாதிவெறியர்களைப் பாதுகாக்கும் அரசையும், போலீசையும் எதிர்த்து நாக்பூர் நகரில் நடந்த தாழ்த்தப்பட்டோரின் போராட்டம்.**



அரியானா ஜஜ்ஜாரில் சாதி இந்து வெறியர்கள் ஐந்து தாழ்த்தப்பட்ட இளைஞர்களை வெட்டிக் கொன்ற சம்பவம் போலீசு நிலையத்தின் முன்பாக, மாவட்ட போலீசு அதிகாரிகள் மற்றும் நிர்வாக நீதிபதி முன்னிலையில், பொது இடத்தில், பட்டப்பகலில் நடந்துள்ளது. இவர்கள் எல்லாம் அந்தக் கொடூர நிகழ்ச்சியைத் தடுத்து நிறுத்த சிறு முயற்சியும் மேற்கொள்ளாது வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். துப்பாக்கிச் சூடு நடத்தி, கும்பலைக் கலைத்து, கொலையாளிகளைக் கைது செய்யுமளவு அதிகாரமும், ஆயுதங்களும் இருந்தும், அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று பின்னர் சாக்கு சொன்னார்கள். இதற்காக அந்த அதிகாரிகள் மீது எவ்வொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

www.padippakam.com

மகாராட்டிரம், . மரத்வாடாவில் 2003, மே மாதம் பூட்டேகோவன் கிராமத்தில் திரண்ட ஆதிக்கசாதி இந்துக்கள் ஒரு தாழ்த்தப்பட்ட இளைஞனைத் தீயிட்டுக் கொளுத்தினர். ஏறக்குறைய அதேகாலகட்டத்தில், பீட் மாவட்டத்தின் சொன்னகோட்டா என்ற ஊரில் தாழ்த்தப்பட்ட ஒரு ஏழை இளைஞனை ஆதிக்கசாதி இந்துக்கள் துரத்திச் சென்று அடித்தே கொன்றனர். இந்த நிகழ்ச்சிகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கெதிரான வன்கொடுமைத் தாக்குதலில் வெறித்தனமும் வக்கிரமும் அதிகரித்து வருவதையே காட்டுகின்றன.

மகாராட்டிர மாநிலம் கயர்லாஞ்சி அருகே போட்மாங்கே தாழ்த்தப்பட்ட குடும்பத்தினருக்கு எதிராக நடந்த கொடூரம் நம்ப முடியாத அளவு வெறித்தனமும் வக்கிரமும் உச்சபட்சமாக இருந்தது. தாழ்த்தப்பட்ட தாயும் மகளும் நிர்வாணப்படுத்தி ஊரின் நடுப்பகுதிக்கு இழுத்து வரப்பட்டனர். இரு இளைஞர்கள் அவர்களுடைய தாயோடும், சகோதரிகளோடும் வன்புணர்ச்சி செய்யுமாறு கொடுமைப் படுத்தப்பட்டனர்; அதற்கு அவர்கள் மறுத்ததால் அவர்களின் ஆண்குறிகள் கல்லால் அடித்து நசுக்கப்பட்டன. அந்தத் தாழ்த்தப்பட்ட தாயும் மகளும் ஆதிக்க சாதி கும்பலால் பாலியல் வன்முறை செய்து கொல்லப்பட்டனர். அவர்கள் நால்வரின் உடல்களும் கால்வாய்களில் வீசி எறியப்பட்டன.

இப்படி, எவ்வளவு கொடூரமாகவும், அப்பட்டமாகவும் ஆதிக்க சாதி இந்துக்களின் தாக்குதல்கள் இருந்த போதும் போலீசின் நடவடிக்கைகள் பெரும்பாலும் குற்றவாளிகளைக் காக்கும் வகையிலேயே இருக்கின்றன.

போலீசு மட்டும் உரிய எச்சரிக்கைகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தால் கயர்லாஞ்சியில் நடந்த கொடூரங்கள் தடுக்கப்பட்டிருக்கும். அதன்பிறகும் உண்மையான குற்றவாளிகளைத் தப்புவிக்கும் வகையில் போலீசு நயவஞ்சக சூழ்ச்சிகளை மேற்கொண்டு, வழக்கை நீர்த்துப் போகச் செய்துவிட்டது. போலீசின் உதவியும் தலையீடும் கோரிப் பலமுறை புகார் கூறியும் போலீசு பாராமுகமாக இருந்துவிட்டது.

சாதி இந்துக்கள் திரண்டு வந்து தாக்குதல் நடத்தப் போகிறார்கள் என்று இறுதி நேரத்தில் செல்பேசி தகவல் கொடுத்தும் 20 நிமிடத்தில் சம்பவ இடத்துக்கு வந்துவிடும் எட்டு கி.மீ. தூரத்தில் இருந்தும் போலீசு வரவில்லை. இரண்டு மணி நேரம் கொடூரங்கள் நிகழ்ந்திருக்கின்றன. போலீசு நிலையத்துக்கு நேரில் போய் தகவல் கூறியும் வரவில்லை. புகாரையும் பதிவு செய்யவில்லை. கயர்லாஞ்சியில் எல்லாம் நடந்து முடிந்தபிறகு சாவகாசமாக ஒரே ஒரு போலீசுக்காரன் அனுப்பப்பட்டான். அவனும் சாதி இந்து கிராமத் தலைவரிடம் விசாரித்துவிட்டு கிராமத்தில் இயல்பு நிலை நிலவுவதாகக் கூறிவிட்டான்.



**கயர்லாஞ்சிப் படுகொலைகளுக்கு நீதி கேட்டு தாழ்த்தப்பட்டோருடன் இணைந்து போராடியதற்காக மகாராஷ்டிரப் போலீசால் இருபதுக்கும் மேற்பட்ட பொய்வழக்குகளில் சிக்க வைக்கப்பட்ட அஷு சக்சேனா.**

பலியானவர்களின் உறவினர் நேரில் புகார் கொடுத்தும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை. உறவினர்கள் அடையாளங்காட்டியும், அடையாளம் தெரியாத, கேட்பாரற்ற சடலம் என்று பதிவு செய்ததோடு, சாட்சியங்கள், சான்றாதாரங்களை எல்லாம் கிரிமினலுக்குரிய திறமையோடு போலீசே அழித்துவிட்டது. இந்த விவகாரம் முழுக்கவும் முறையற்ற பாலுறவால் நடந்தது என்று பத்திரிக்கைகளுக்குச் செய்தி கொடுத்தது, போலீசு. பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவர்களும், வழக்கை கையாண்ட அரசு வழக்குரைஞரும் பொய்யான ஆதாரங்கள் தகவல்கள் கொடுத்து குற்றவாளிகளுக்குச் சாதகமாகச் செயல்பட்டனர்.

கயர்லாஞ்சி படுகொலைகளைக் கண்டித்து மகாராட்டிராவின் பல இடங்களில் தாழ்த்தப்பட்ட அமைப்புகள் பேரணிகள் நடத்தினர். அமராவதி நகரில் நடந்த பேரணிக்குப் பிறகு போலீசு நடத்திய தாக்குதல், துப்பாக்கிச் சூட்டில் ஒரு இளைஞர் கொல்லப்பட்டார்; பலர் காயமடைந்தனர். அங்கிருந்த மக்களை சுற்றிவளைத்த போலீசு சூறையாடுதல், கலவரம் செய்தல் போன்ற பல பொய் வழக்குகள் போட்டது. கயர்லாஞ்சி கொடூரம் பற்றிய உண்மை அறியும் குழுவின் அறிக்கை வைத்திருந்த பள்ளி ஆசிரியர் மீது சுவரொட்டிகள் வைத்திருந்ததாகவும், கலவரத்தைத் தூண்டியதாகவும் பொய் வழக்குப் போட்டது.

யாவட்மால் எனுமிடத்தில் நடந்த ஒரு சிறு பேரணியைத் தொடர்ந்து ஆதிக்க சாதியின் திடீர் அரசியல்வாதி ஒருவன் தனது கூலிப் படையை ஏவி, அம்பேத்கர் சிலைக்கு செருப்பு மாலை அணிவித்து அவமரியாதை செய்தான். அவனது அடியாட்கள் சிலை இருந்த பட்டிபுர கிராமத்தை சூறையாடினர். அக்குண்டர்களைக் கைது செய்வதற்குப் பதில் கயர்லாஞ்சி சம்பவத்தைக் கண்டித்து பேரணி நடத்திய பெண் தலைவரைக் கைது செய்து பாலியல் வன்செயலும் நடத்தியது போலீசு.

இதுபோன்று மகாராட்டிராவின் பல இடங்களில் சிவசேனா, பா.ஜ.க. குண்டர்கள் வெறியாட்டம் போட்டதற்கு, போலீசு துணைநின்றது. கயர்லாஞ்சி கொடூரத்தை தடுக்கவோ, குற்றவாளிகளைத் தண்டிக்கவோ செய்யாத போலீசு, அதைக் கண்டித்து இயக்கங்கள் நடத்திய தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு மாநிலம் முழுவதும் 2000 இளைஞர்கள் மீது பொய் வழக்குகள் போட்டு, கைது செய்து சிறையிலடைத்தது.

உள்ளூர் போலீசுதான் ஆதிக்க சாதி இந்துக்களின் செல்வாக்கின் கீழ் உள்ளதால் இப்படி நடந்து கொள்கின்றன என்றில்லை. கடலூர் மாவட்டம், புதுக் கூரைப்பட்டு கிராமத்தில் வன்னியப் பெண்ணும் தாழ்த்தப்பட்ட ஆணும் காதலித்த குற்றத்துக்காக மரத்தில் கட்டி வைத்து நஞ்சு ஊற்றிக் கொன்ற வழக்கை மத்திய புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) மேற்கொண்டது. அந்தத் தாழ்த்தப்பட்ட இளைஞனுக்கு அவனது சிறிய தந்தைதான் நஞ்சு ஊற்றிக் கொன்றார் என்று ஆதிக்க சாதிக்கு சாதகமாக வழக்கைப் புனைந்துவிட்டது சி.பி.ஐ. இந்த வழக்கில் ஆதிக்க சாதி இந்துக்கள் தண்டிக்கப்பட்டால் சாதி மோதல் ஏற்படும் என்று காரணங் காட்டிக் குற்றவாளிகளைத் தப்புவிப்பதற்குப் பலவழிகளிலும் சி.பி.ஐ. முயன்று வருகிறது.


படிப்பகம்

www.padippakam.com

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை அமலாக்கக்கூடிய முதன்மையான பொறுப்பு இந்த அரசு அமைப்பின் முக்கிய அங்கமாகிய போலீசிடம் தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதை மேற்பார்வையிடவும், ஆலோசனைகள் வழங்கவும் தாழ்த்தப்பட்ட அரசியல் பிரமுகர்கள், அதிகாரிகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் நியமிக்கப்படுகின்றனர் என்று சட்டம் கூறுகிறது. ஆனால், பல மாநிலங்களில் இத்தகைய மேற்பார்வை, ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படவே இல்லை. சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு சிறப்பு விசாரணை அதிகாரிகளோ, சிறப்பு நீதிமன்றங்களோ நியமிக்கப்படவும், அமைக்கப்படவுமில்லை.

ஆளும் வர்க்கத்தின் ஒரு அங்கமாகிய ஆதிக்கசாதியினர், ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னேறுவதற்கும் தமது உரிமையை நிலைநாட்டுவதற்கும் முயலும்போது சாதியத்தைக் கட்டிக் காப்பதில் மேலும் மேலும் மூர்க்கமாக இருக்கின்றனர். அரசமைப்பு முழுக்கவும் இதற்காகதான் பாடுபடுகிறது. போலீசு அமைப்போ பெரும்பாலும் ஆதிக்கசாதி அதிகாரிகளைக் கொண்டதாகவே இருக்கிறது.

அதுமட்டுமல்ல; வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் உட்பட தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாப்புக்கான மற்ற பிற சட்டங்கள், அமைப்புகளை அமலாக்கும் பொறுப்பில் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த அதிகாரிகளும், போலீசும் இருந்தால்கூட அவர்களும் பெரும்பாலும் ஆதிக்கசாதி நலன்களுக்காகத்தான் செயல்படுகிறார்கள் என்பதற்கும் ஏராளமான சான்றுகள் உள்ளன. அவர்கள் முதலாவதாக பிழைப்புவாதத்தில் ஊறி போனவர்களாக இருக்கின்றனர். ஆதிக்க சாதியினரைப் பகைத்துக் கொள்வது தமது பதவிக்கு ஆபத்தாக முடியுமென்று அஞ்சுகின்றனர்.

கயர்லாஞ்சியில் கொடுமை நடந்த பகுதியின் போலீசு சூப்பிரண்டெண்ட் பண்டாரா என்பவரும், துணை போலீசு சூப்பிரண்டெண்ட், அப்பகுதியின் போலீசு நிலைய அதிகாரி, அவருக்குக் கீழ் பணியாற்றிய போலீசுக்காரன், பிரேத பரிசோதனை செய்த மருத்துவர், மாவட்ட அறுவைச் சிகிச்சை மருத்துவர் (இவரே பெண் மருத்துவர் இல்லாமல் பிரேத அறுவை சோதனை செய்ய அனுமதித்தவர்), அரசு வழக்குரைஞர் (இவரே குற்றத்தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யவேண்டாம் என்று பரிந்துரைத்தவர்) போன்ற அனைவரும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களே. இவர்கள் அனைவருமே கயர்லாஞ்சி கொடூரத்திற்கு இலக்கான தாழ்த்தப்பட்ட போட்மாங்கே சாதியின் உட்பிரிவினராக இருந்த போதும் யாருமே ஆதிக்க சாதியினரின் சாதிவெறியைக் கண்டுகொள்ளவேயில்லை.



**மேல்சாதி வெறியர்களால் கும்பலாக பாலியல் பலாத்காரப் படுத்தப்பட்ட ராம்கதா (பெயர் மாற்றப்பட்டுள்ளது). குற்றவாளிகள் மீது இவர் கொடுத்த புகாரைப் பதிவு செய்யாமல் இழுத்தடித்தது ம.பி. போலீசு.**

இக்கொடூர நிகழ்வு மற்றும் வழக்கின் ஒவ்வொரு கட்டத்திலும் இந்த அதிகாரிகளின் கூட்டம் குற்றவாளிகளுக்குச் சாதகமாகவே நடந்து கொண்டது. இந்த அதிகாரக் கூட்டத்துக்கு எதிராக நின்ற தலித் தனிநபர்களின் குரல் எடுபடவேயில்லை.

இதுதான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரான வன்கொடுமை நிகழ்ந்த பிற பகுதிகளின் அனுபவமும் ஆகும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக வன்கொடுமைகள் நடக்கும் ஒவ்வொரு சம்பவத்தையும் தொடர்ந்து ''தலித் அரசியல் வாதிகள்'' காணாமல் போய் விடுகிறார்கள். அல்லது கண்டன அறிக்கைகள், அடையாளப் பேரணிகளோடு முடித்துக் கொள்கிறார்கள். தலத் அரசியலும், தலித் அரசியல்வாதிகளும் திவாலாகிப் போனதையே திரும்பத் திரும்ப இச்சம்பவங்கள் வெட்டவெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. பார்ப்பன எதிர்ப்பில் மட்டுமே தலித் அரசியல்வாதிகள் மூழ்கிப் போயுள்ளனர். பார்ப்பனியத்தை பிற்படுத்தப்பட்ட ஆதிக்க சாதியினர்தாம் அதிகம் வெளிபடுத்துகிறார்கள்; இவர்கள்தாம் எங்கும் சாதி ஆதிக்கவெறி தாக்குதலில் முன்னிற்கின்றனர்.

ஆனால், தவறான ''சமூக நீதி''க் கண்ணோட்டம் மற்றும் ஓட்டுக் கட்சி அரசியல் காரணமாக பிற்படுத்தப்பட்ட ஆதிக்கசாதிகளுடன் சமரசம் செய்து கொள்வதிலேயே ''தலித் அரசியல் தலைவர்கள்'' ஆர்வமாக இருக்கின்றனர். இதன் காரணமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான வன்கொடுமைகளுக்குக் காரணமான குற்றவாளிகளை தண்டிப்பதில் இருந்து தப்புவிப்பதற்குத் துணை போகிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் உட்பட தாழ்த்தப்பட்டவர்கள் பாதுகாப்பு மற்றும் நலன்களுக்கானவையென்று எவ்வளவுதான் சட்டங்களும் திட்டங்களும் வந்தாலும் அவற்றுக்கு எதிராகவே செயல்படும் அதிகார வர்க்கம், சட்டம், நீதி, போலீசு மற்றும் ஓட்டுக் கட்சி அரசியல் அமைப்புக்குள்ளிருந்து சீர்திருத்தங்கள் மூலம் ''விடுதலை'' பெறுவது என்று வரம்புக்குட்பட்டுத்தான் ''தலித் அரசியலும் தலித் அரசியல் தலைவர்களும்'' செயல்படுகின்றனர்.

அந்த அமைப்புக்கு வெளியிலிருந்து, அதைத் தகர்த்து தாழ்த்தப்பட்ட மக்கள் பிற புரட்சிகர மக்களுடன் இணைந்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் வன்கொடுமைகளில் இருந்து விடுதலை பெறுவதற்கான வழியாகும்.

**- முற்றும் -**

**● ஆர்.கே.**



படிப்பகம்

www.padippakam.com

# குப்பை அள்ளுவதிலும் மோசடி

# தனியார்மயத்தின் மகிமை

ஏழே கால் ஆண்டுகளுக்கு சென்னையின் குப்பையை அள்ளுவதற்காக மு.க. ஸ்டாலினால் அழைத்து வரப்பட்ட சிங்கப்பூர் நிறுவனமான ஓனிக்ஸின் ஒப்பந்த காலம் ஆகஸ்ட் 2007-இல் முடிவடைகின்றது. அதன் பின்னர் குப்பை அள்ள, நீல் மெட்டல் புராடக்ட்ஸ் எனும் கொலம்பிய குப்பை அள்ளும் நிறுவனத்துடன் புதிய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. மீண்டும் தனக்கே ஒப்பந்தம் கிடைக்கும் என்ற ஓனிக்ஸின் கனவு தகர்ந்து போனதால், தனது ஒப்பந்தம் முடிவதற்கு 3 வாரங்களுக்கு முன்னரே குப்பை அள்ளுவதை ஓனிக்ஸ் நிறுத்திக் கொண்டது. குப்பைத் தொட்டிகளை மீண்டும் பயன்படுத்த முடியாதபடிக்கு உடைத்தும் போட்டது.

இதன் விளைவாக சென்னையின் நவீன அக்ரகாரமான ராஜா அண்ணாமலைபுரமும் அடையாறும் கலாசேத்ரா காலனியும் குப்பைகளால் நாறியது. இது "தினமணிக்கு" பொறுக்க முடியவில்லை. தனியார்மய ஆதரவாளர்களை செல்லமாகக் கடிந்து விட்டு, 'மாநகராட்சி என்ன செய்துக் கொண்டிருக்கிறது?' எனப் பிரச்சினையை திசை திருப்பிய "தினமணி", ஓனிக்சுக்கு பிரித்து விட்டிருந்த இந்த அக்ரகாரக் குப்பைகளை அவசரமாக அள்ள மாநகராட்சி ஊழியர்களைப் பயன்படுத்தக்கோரி தலையங்கமே எழுதியது. "இந்து"வும் தன் பங்குக்கு யோசனைகளை மாநகராட்சிக்கு அள்ளி வழங்கியது. ஓனிக்ஸின் இந்த சட்டவிரோதச் செயலுக்கு அதன் தலைமை நிர்வாகிகளைப் பிடித்து வந்து நாலு சாத்து சாத்தி, பெருந்தொகையை அபராதமாக வசூலிப்பது தானே முறை. ஆனால் சிங்காரச் சென்னையின் மேயரோ, "இந்து" முதல் "தினமணி" வரை ஓலமிட்டவுடன் ஓனிக்ஸ் குப்பை அள்ள வேண்டிய அந்தப் பகுதிகளுக்கு மாநகராட்சி ஊழியர்களை அனுப்பி வைத்தார்.

'மாநகராட்சி ஊழியர்களுக்கு குப்பை கூட சரிவர அள்ள வராது' எனும் பொதுக்கருத்தை நடுத்தரவர்க்க மண்டைக்குள் திணித்து 'எல்லாம் தனியார் கிட்ட போனாதான் சார் நல்லா இருக்கும்' என்று அவர்களைப் பேச வைத்தவையும் இதே ஊடகங்கள்தான்.

அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்த போது, அவர்கள் வேலைக்கு வராத நாட்களுக்கு சம்பளம் தரக் கூடாது என்று திமிராகப் பேசியது, நீதித்துறை அதையே வாந்தி எடுத்தன, ஊடகங்கள். ஆனால், ஓனிக்சு செய்த இந்த அராஜகத்திற்கோ இதே ஊடகங்கள் அவர்களைச் சட்டப்படி தண்டிக்காமல், தனியார் செய்து முடித்திருக்க வேண்டிய வேலையை அரசு ஊழியர்களை வரவழைத்து விரைந்து முடிக்க சொல்கின்றன. எந்தவித தர்க்கத்துக்கும் பொருந்தாத இந்த நியாயத்தை (!) எந்த நாட்டிலாவது காண இயலுமா?

கடந்த 7 ஆண்டுகளிலும் ஓனிக்ஸ், குப்பைகளை டன்னுக்கு ரூ. 650 எனும் கணக்கில் அள்ளியது. அதில் கூட இடிக்கப்பட்ட கட்டடக் கழிவுகளைச் சேர்த்து எடையைக் கூட்டிக் காட்டி நமது வரிப்பணத்தை மாநகராட்சியிடமிருந்து கொள்ளையிட்டுள்ளது.

தனது ஊழியர்களை நின்று ஓய்வு எடுக்கக் கூட இடைவேளை கொடுக்காமல் சக்கையாக உறிஞ்சி மாதம் ஒன்றுக்கு ஒரு கோடி வரை லாபமாக ஈட்டிய நிறுவனம்தான் ஓனிக்ஸ். முன்பு மாநகராட்சி குப்பையை அகற்றியபோது 3 பேர்கள் செய்த வேலையை ஓனிக்ஸ் தொழிலாளி ஒருவரே செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். இத்தகைய வேலைப்பளு தாங்க முடியால் வேலையை விட்டு ஓடியவர்கள் மட்டும் 4000 பேர்களாவர். எஞ்சியிருந்த ஊழியர்களும், ஒப்பந்தம் முடிந்து விட்டதாகக் கூறி குப்பையைப்போல வேலையிலிருந்து வீசியெறியப்பட்டுள்ளனர்.

ஆனால், "ஓனிக்ஸ் சென்னைக்கு வந்தபின்னர்தான் குப்பைகூளங்கள் சிறப்பாக அள்ளப்படுகின்றன. அனைவருக்கும் அழகான சீருடை; கை நிறைய சம்பளம்; அனைத்து சாதியினரும் இந்தத் தொழில் செய்ய வந்தனர். இதனால் சாதி ஒழிந்திருக்கிறது" என்றெல்லாம் புகழ்கிறது வீரமணியின் 'உண்மை' ஏடு.

திருவல்லிக்கேணி - வீ.ஆர்.பிள்ளை தெருவில் குவிந்து கிடக்கும் குப்பை: தனியார்மயத்தின் இலட்சணம்.



பூலே, பெரியார், அம்பேத்கர் ஆகியோர் இடையறாத போராட்டங்கள் மூலம் சாதியத்தை ஒழிக்க வழிகாட்டும்போது சாதி ஒழிப்பை 'தனியார்மயம்' சாதிக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறது 'உண்மை'ஏடு.

நாறுவது தனியார்மயம் மட்டுமல்ல; "பகுத்தறிவு", "சமூக நீதி" வேடமணிந்த பிழைப்புவாதிகளின் யோக்கியதையும் தான்!

● கவி

www.padippakam.com

# சீன சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்:

# சீழ் பிடித்து நாறும் இரணங்கள்

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் எனும் மறுகாலனியக் கொள்கையைத் தீவிரமாகச் செயல்படுத்தி வரும் ஆட்சியாளர்கள், இதற்கு சீனாவை முன்னுதாரணமாகக் காட்டுகிறார்கள். சாதாரண மீன்பிடி கிராமமாக இருந்த சீனாவின் ஷென்சென் இன்று ஆலைகள், அலுவலகங்கள், அடுக்குமாடிக் கட்டிடங்கள் வர்த்தக நிறுவனங்கள் என பிரம்மாண்டமான வளர்ச்சியைப் பெற்றதற்கு அங்கு நிறுவப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலம்தான் காரணம் என்று விளக்கமளிக்கிறார்கள். முதலாளித்துவப் பொருளாதாரவாதிகளோ, சீனாவைப் போல வளர்ச்சியைச் சாதிக்க வேண்டுமானால் இந்தியாவில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை விரிவாகக் கட்டியமைக்க வேண்டியது அவசியம் என்று வாதிடுகின்றனர்.

''சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மூலம் மாபெரும் வளர்ச்சியைச் சாதிப்பதில் சீனா ஒளிரும் முன்னுதாரணமாகத் திகழ்கிறது. பல்வேறு சலுகைகளை அளிப்பதன் மூலம் அன்னிய மூலதனத்தைக் கவர்ந்திழுத்து, தனது பொருளாதாரத்தை மிகப் பெருமளவுக்கு சீனா வளர்த்தெடுத்துள்ளது'' என்று 2005-ஆம் ஆண்டில் சிறப்புப் பொருளாதார மண்டலச் சட்டம் தொடர்பாக நாடாளுமன்ற விவாதத்தின் போது, புதுச்சேரி பா.ம.க எம்.பி.யான இராமதாசு புகழ் பாடினார். சீனாவில் நிறுவப்பட்டுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், பொருளாதாரத்தில் புதிய பாய்ச்சலைத் தோற்றுவித்துள்ளதோடு, அந்நாடு ஆசியாவின் புதிய வல்லரசாகப் பரிணமித்து வருகிறது என்று ஏகாதிபத்திய வாதிகள் சீனாவின் புகழ் பாடுகின்றனர். போதாக்குறைக்கு, போலி கம்யூனிஸ்டுகளான சி.பி.எம். கட்சியினரும், ''சீன அரசின் தெளிவான சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கை, பெரும் வெற்றியை ஈட்டியுள்ளது'' என்று தமது 'மார்க்சிஸ்ட்' மாத இதழில் (பிப்.07) பூஜிக்கின்றனர்.

இப்படி ஏகாதிபத்தியவாதிகளாலும், அவர்களின் கைக்கூலி ஆட்சியாளர்களாலும், சர்வகட்சி ஓட்டுப் பொறுக்கிகளாலும் துதிக்கப்படும் சீன சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் யோக்கியதை என்ன?

ஏழை நாடுகளில் ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்ட ஏற்றுமதி பொருளுற்பத்தி மண்டலங்களின் (EPZ) புதிய பரிமாணம்தான் 1980-களில் சீனாவில் உருவாக்கப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்கள். அன்னிய முதலீட்டாளர்களுக்கு இதர நாடுகள் கணக்கற்ற சலுகைகளை அளித்து வந்தபோது, அவர்களுக்குத் தனியே ஒரு சமஸ்தானத்தை அமைத்துக் கொடுத்த சீனாவின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள், இதையே சிறப்புப் பொருளாதார மண்டலம் என்று குறிப்பிட்டனர். ஏகாதிபத்தியச் சூறையாடலுக்குக் கதவை அகலத் திறந்துவிடும் இக்கேடுகெட்ட கொள்கையை ''சந்தை சோசலிசம்'' என்றும் ''முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதை'' என்றும் கயிறு திரித்தனர்.

**சீன சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் யோக்கியதை: ஷென்செனிலுள்ள பஞ்சாலையில் பாதுகாப்புச் சாதனங்கள் கூடத் தரப்படாமல் பணியாற்றும் தொழிலாளி.**




சீனாவில் 6 பெரும் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் செயல்படுவதாகக் கூறப்பட்டாலும், பல்லாயிரக்கணக்கான சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்பட்டன. இவற்றில் அன்னிய முதலீடுகள் வெள்ளமெனப் பாயும் என்ற சீன ஆட்சியாளர்களின் கனவு புஸ்வாணமாகிப் போனது. குவாங்டாங் மாநிலத்திலுள்ள ஷென்சென் மண்டலம் தவிர, இதர சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் எதிர்பார்த்த அளவிற்கு அன்னிய முதலீடுகள் வரவில்லை. குறிப்பாக, ஷாண்டூவ் மண்டலத்துக்கு அன்னிய முதலீடாக சல்லிக் காசு கூட வரவில்லை.

அமெரிக்க, ஐரோப்பிய முதலீடுகளை எதிர்பார்த்து பல சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்பட்ட போதிலும், அந்நாடுகளிலிருந்து மிக அற்பமான அளவுக்கே முதலீடுகள் வந்தன. ஹாங்காங், தைவான் ஆகியவற்றிலிருந்தே பெருமளவுக்கு முதலீடுகள் செய்யப்பட்டன. ஒட்டுமொத்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் ஹாங்காங், தைவான் முதலாளிகளின் முதலீட்டு பங்கு 88%க்கு மேலாக இருந்தது. பீற்றிக் கொள்ளப்படும் ஷென்சென் மண்டலத்தின் ஜவுளி உற்பத்தி மற்றும் ஆயத்த ஆடை தயாரிப்பு முதலானவற்றில் ஹாங்காங் முதலாளிகளின் பங்கு 95%-க்கு மேலானதாக இருந்தது. ஏகாதிபத்திய நாடுகளின் முதலீடு மிகமிகக் குறைவானதாகவே இருந்தது. சிறப்புப் பொருளாதார மண்டலத்தால் ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து மூலதனமும் தொழில்நுட்பமும் குவியும் என்ற மாயை ஷென்சென் மண்டலத்திலேயே தகர்ந்து போய் விட்டது.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காகவும் வீட்டுமனை - கட்டுமானத் தொழில் வளர்ச்சிக்காகவும் 1992-93-இல் சீன அரசு 1,27,000

www.padippakam.com

ஹெக்டேர் விளைநிலங்களை முதலாளிகளுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தது. இருப்பினும் இன்று வரை இவற்றில் 46.5% நிலங்கள் மட்டுமே உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளால் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஏராளமான சலுகைகளோடு நிலங்களை ஒப்படைத்தால், இடையூறின்றி முதலாளிகள் தொழில் தொடங்குவார்கள் என்ற எதிர்பார்ப்பு கேழ்வரகில் நெய் வடிந்த கதையாகி விட்டது. இம்மண்டலங்களுக்காக ஒதுக்கப்பட்ட பாதிக்கும் மேலான நிலங்கள் இன்று தரிசாகக் கிடக்கின்றன.



**ஒய்யாரக் கொண்டையின் உள்ளே ஈறும் பேனும்: பேரழிவுகளைக் கருக்கொண்டு நிற்கும் பிரம்மாண்டமான ஷென்சென் சிறப்புப் பொருளாதார மண்டலம்.**

சீன மைய அரசு உருவாக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஒரு புறமிருக்க, இன்னும் ஏராளமான சலுகைகளுடன் மாநில அரசுகள் 6000 முதல் 8500 வரையிலான சிறிய அளவிலான சிறப்புப் பொருளாதார மண்டலங்களை '90-களில் உருவாக்கின. இவற்றின் மொத்தப் பரப்பளவு 15,000 சதுர கி.மீ.க்கும் மேலாகும். இது சீனாவில் தற்போதுள்ள நகரங்களின் பரப்பளவை விட அதிகமாகும். இப்படி வெறிபிடித்த வேகத்தில் தொடங்கப்பட்ட மண்டலங்களில் பாதியளவுக்குக் கூட செயல்படவில்லை. பின்னர், மைய அரசு இவற்றில் 2000-க்கும் மேற்பட்ட மண்டலங்களை ரத்து செய்து பழைய நிலைக்குத் திரும்ப முயற்சித்து வருகிறது.

1986-லிருந்து 1996 வரையிலான பத்தாண்டுக் காலத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக சீன அரசு ஏறத்தாழ 50 லட்சம் ஹெக்டர் விளைநிலங்களைப் பறித்தெடுத்தது. குறிப்பாக, ஃபூஜியன் மாநிலத்தில் உள்ள சியாமென் மண்டலத்திற்காக ஏறத்தாழ 4 லட்சம் ஹெக்டேர் விளைநிலங்கள் பறிக்கப்பட்டன. இந்நிலங்களில் ஓட்டல்கள், உல்லாச விடுதிகள், வணிக வளாகங்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி வீட்டுமனைத் தொழில் முதலாளிகள் ஆதாயமடைந்தனரே தவிர, புதிதாக தொழிற்சாலைகள் எதுவும் உருவாகவில்லை. வேலை வாய்ப்பும் பெருகவில்லை. வேறிடத்திலுள்ள சில வர்த்தக நிறுவனங்கள் இம் மண்டலங்களுக்கு இடம் பெயர்ந்ததைத் தவிர, புதிய நிறுவனங்கள் எவையும் உருவாகி வளரவில்லை. ஏற்றுமதிக்கான தொழில் நிறுவனங்களை உருவாக்காமல் வெறுமனே உல்லாச விடுதிகள், குடியிருப்புகள் உருவாக்குவதற்கு இப்போது சீன அரசு கட்டுப்பாடு விதிக்குமளவுக்கு நிலைமை விபரீதமாகிவிட்டது.

''உலகின் மிகப் பெரிய ஊகவணிக நீர்க்குமிழி'' என்று 'எக்னாமிஸ்ட்' எனும் ஆங்கில வார ஏடு சித்தரித்த ஹைனான் சிறப்புப் பொருளாதார மண்டலம், சீனாவின் அனைத்து சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் யோக்கியதைக்கு எடுப்பான சான்றாகத் திகழ்கிறது. அங்கு 30 மாடிக்கும் உயரமான பெரும் வர்த்தக கட்டடங்கள் காலியாகிக் கிடக்கின்றன. பெருமுதலாளிகள் குடியேறுவதற்காகக் கட்டப்பட்ட ஆடம்பர பங்களாக்களில் எதிர்பார்த்தபடி அன்னிய முதலாளிகள் முதலீடு செய்ய வராததால், அவற்றில் கோட்டான்களே குடியிருக்கின்றன. தொழில்நுட்ப ஊழியர்கள் குடியிருப்பதற்காகக் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. ஊக வணிகம், வரி ஏய்ப்பின் மூலம் வீட்டுமனைத் தொழில் முதலாளிகள் கொழுப்பதற்காகவே உருவாக்கப்பட்டு ஊதிப் பெருத்த அந்த மண்டலம், முதலாளித்துவச் சூறையாடலின் நினைவுச் சின்னமாக நிற்கிறது. இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கென உருவாக்கப்பட்ட ஹைனான் வளர்ச்சி வங்கி திவாலாகி மூடிக் கிடக்கிறது.

திவாலானது இந்த ஒரு வங்கி மட்டுமல்ல; இதற்கு முன்பாகவே குவாங்டாங் அனைத்துலக டிரஸ்ட் மற்றும் குவாங்டாங் முதலீட்டு கார்ப்பரேசன் ஆகிய வங்கிகள் திவாலாகி விட்டன. வேடிக்கை என்னவென்றால் இந்த குவாங்டாங் மாநிலத்தில்தான் 'மாபெரும் வளர்ச்சியை' எட்டியதாகக் கூறப்படும் ஷென்சென் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைந்துள்ளது.

இந்த ஷென்சென் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில்தான் ஆலைத் தொழிலாளர்கள் விபத்துகளில் சிக்கி பெருமளவில் மரணமடைந்துள்ளனர். இங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாததாலேயே விபத்துகளும் மரணங்களும் தொடர்கின்றன. இத்தொழிலாளர்களுக்குச் சட்டரீதியாகவோ சமூக ரீதியாகவோ எவ்வித பாதுகாப்பும் கிடையாது. இத்தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைத்துக் கொள்ளவும் உரிமை கிடையாது. இம்மண்டலத்தில் மட்டும், ஏறத்தாழ 5 லட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக உழல்கின்றனர். இம்மண்டலத்தில் பாதிக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு முறையாக சம்பளம் தராமல் கோடிக்கணக்கில் பாக்கி வைத்துள்ளன. இம்மண்டலத்திலும் இதர பகுதிகளிலும் சேர்த்து நாடெங்கும் கடந்த 2006-ஆம் ஆண்டில் மட்டும் 10,000-க்கும் மேற்பட்ட தன்னெழுச்சியான தொழிலாளர் போராட்டங்கள் நடந்துள்ளன.

இவை எல்லாவற்றையும் விட, எல்லா வகையான சமூக சீரழிவுகளின் மையமாக இச்சிறப்புப் பொருளாதார



படிப்பகம்

மண்டலங்கள் திகழ்கின்றன. விபச்சாரத்துக்கும் பெண் கடத்தலுக்கும் பெயர் பெற்றுள்ள ஷாங்காய் நகரத்தைவிட, சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைந்துள்ள ஷென்சென்னில் 9 மடங்கு அதிகமாகக் குற்றங்கள் கேள்விமுறையின்றித் தொடர்கின்றன. ஷான்டோவ், ஷியாமென் ஆகிய சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் வரிஏய்ப்பு மோசடிகளும் கடத்தலும் பெருமளவில் நடந்துள்ளதாக சீன அரசே ஒப்புக் கொண்டுள்ளது. இத்தகைய மண்டலங்களால் அன்னியச் செலாவணி இழப்பு ஏற்பட்டு, பண வீக்கம் பெருகியது.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக விளைநிலங்கள் பறிக்கப்பட்டு, விவசாயம் புறக்கணிக்கப்பட்டதால் விவசாயிகள் பிழைக்க வழியின்றி நகரங்களை ஓடி வருகின்றனர். இதனால் நகர்ப்புற மேட்டுக்குடியினரின் வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுவதாகக் குற்றம் சாட்டி அம்மக்களை சீன அரசு நகர்ப்புறங்களிலிருந்து விரட்டியடிப்பதோடு, நகரங்களின் எல்லைகளில் தடுப்பரண்களை எழுப்பி அவர்கள் நகரினுள் நுழையாமல் தடுத்து வருகிறது. வாழவழியின்றி நாடோடிகளாக அலையும் விவசாயிகள் பிச்சை எடுக்கும் அவலத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.



'வளர்ச்சி'யின் மறுபக்கம்: கொத்தடிமைத்தனத்தில் உழலும் சீனத் தொழிலாளி

சிறப்புப் பொருளாதார மண்டலங்களால் விளைந்த பேரழிவுகளை அனுபவ ரீதியாக உணர்ந்த சீன அரசு திட்டக் குழுவின் முன்னாள் ஆலோசகராக இருந்த சாவோசியோ, ''சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பாதை முடிவுக்கு வந்து முட்டுச் சந்தில் சிக்கிக் கொண்டு விட்டது. சீழ்பிடித்து நாறும் இரணங்களை அன்னிய முதலீடு எனும் பட்டுத் துணியால் இனிமேலும் மூடிமறைக்க முடியாது'' என்று 2006-ஆம் ஆண்டில் சாடினார்.

சீன சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் வளர்ச்சிக்கான முன்னுதாரணம் அல்ல; பேரழிவுக்கான முன்னெச்சரிக்கை என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

*[இக்கட்டுரைக்கான ஆதாரங்கள் ''எக்னாமிக் அண்டு பொலிடிகல் வீக்லி'' எனும் ஆங்கில வார இதழிலிருந்து (ஏப்ரல் 28 - மே 4, 2007) எடுக்கப்பட்டுள்ளன].*

• குமார்

# ஒரு கிலோ அரிசியும் இரண்டு ரூபாய்; சிறுநீர் கழிக்கவும் இரண்டு ரூபாய்!

## — கட்டணக் கொள்ளைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

வேலூர் நகரின் மத்திய பேருந்து நிலையம் ''எக்ஸ்னோரா'' என்ற தனியார் நிறுவனத்தின் பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தனியாரிடம் ஒப்படைத்தால் நிர்வாகம், பராமரிப்பு, சேவை என அனைத்துமே மேம்பட்டு சிறப்படையும் என்று கருதும் மேதாவிகள் இப்பேருந்து நிலையத்துக்கு வந்தால், மூக்கைப் பிடித்துக் கொண்டு ஓடிவிடுவார்கள்.

இப்பேருந்து நிலையத்தினுள்ளே வந்து செல்ல சாலை வசதியில்லை. பயணிகளுக்கு நிழற்குடை இல்லை. ஆட்டோ நிறுத்தம்கூட இல்லாததால் மூட்டை முடிச்சுகளோடு பயணிகள் அவதிப்படுகின்றனர். கிட்ட நெருங்கவே முடியாதபடி முடைநாற்றமடிக்கின்றன கழிப்பறைகள்; அவற்றில் சிறுநீர் கழிக்க கட்டணமாக இரண்டு ரூபாயை வழிப்பறி செய்கிறது எக்ஸ்னோரா.




பேருந்து நிலையத்தின் யோக்கியதை இப்படியிருக்க, வேலூர் நகரமோ சேறும் சகதியுமான சாலைகள், கழிவுநீர் தேங்கி பன்றிகள் உருளும் சாக்கடைகள், அகற்றப்படாமல் மலைபோல் குவிந்து கிடக்கும் குப்பைகள் என குடலைப் புரட்டும் நாற்றத்தால் திணறுகிறது. பெரும் ஒப்பந்தக்காரர்களும் எக்ஸ்னோரா போன்ற 'தொண்டு' நிறுவனங்களும் பகற்கொள்ளையடிக்க, நகராட்சியோ இக்கொள்ளையர்களுக்குத் தொண்டூழியம் செய்து கொண்டிருக்கிறது.

மக்களின் அடிப்படை வசதிகளை அறவே புறக்கணித்துவிட்டு, அவற்றைத் தனியார் கொள்ளைக்குத் திறந்துவிட்டுள்ள நகராட்சியை அம்பலப்படுத்தியும், பேருந்து நிலையத்தை எக்ஸ்னோராவிடமிருந்து பிடுங்குவது உள்ளிட்ட இதர கோரிக்கைகளை வலியுறுத்தியும் நகராட்சி அலுவலகம் முன்பாக 20.8.07 அன்று எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை ம.க.இ.க. நடத்தியது. தனியார்மயத்தின் யோக்கியதையை நாறடித்த இந்த ஆர்ப்பாட்டம், வேலூர் நகர மக்களிடம் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது.

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

அன்னிய நேரடி முதலீடுகள் நின்று விடுவதில்லை. மோசடிக் கணக்கு வழக்குகள் மூலம் ஒரு நாட்டில் முதலீடு செய்த மூலதனத்தையே அவை படிப்படியாகக் கடத்திச் சென்று விடுகின்றன. மேலும், இத்தகைய மோசடி கணக்கு வழக்குகளால் உலகெங்கும் பல நாடுகளில் கோடிகோடியாய் வரி இழப்பையும் ஏற்படுத்துகின்றன. பன்னாட்டு ஏகபோகக் கம்பெனிகளின் மோசடி - தில்லுமுல்லு கணக்கு வழக்குகளால் அமெரிக்காவுக்கு மட்டும் ஆண்டுக்கு ரூ. 1,20,000 கோடிக்கு மேல் வரி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு புலம்புகிறது.

பன்னாட்டு நிறுவனங்கள் எந்த நாட்டில் முதலீடு செய்தாலும், அந்நாட்டு அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியைக் குறைக்கவும் ஏய்க்கவும் தாங்கள் அடைந்த இலாபத்தைக் குறைத்துக் காட்டுவதென்பது இன்னுமொரு மோசடி உத்தி. உலகின் மிகப் பெரிய எண்ணெய் ஏகபோக நிறுவனமான எக்சான், தென்னமெரிக்காவிலுள்ள சிலி நாட்டில் கடந்த 20 ஆண்டுகளாக வரியே செலுத்தியதில்லை. ஏனென்றால், அந்நிறுவனத்துக்கு அங்கே சல்லிக் காசு கூட இலாபம் கிடைக்கவில்லையாம்! அப்புறம் எதற்காக எக்சான் நிறுவனம் பல்லாயிரம் கோடிகளைக் கொட்டி தொழில் நடத்திக் கொண்டிருக்கிறது என்று நீங்கள் அதிகப்பிரசங்கித்தனமாக கேள்வி கேட்கக் கூடாது. அது, சிலி நாடு தொழில் வளர்ச்சியில் முன்னேறி வல்லரசாவதைத் தடுத்து விடும்!

இவை ஒருபுறமிருக்கட்டும். நேரடி அன்னிய முதலீடுகள் புதிதாக எந்தத் தொழிலையும் உருவாக்காமல், ஏற்கெனவே ஒருநாட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனங்களைக் கைப்பற்றி பெயரை மட்டும் மாற்றிக் கொள்கின்றன. அல்லது ஒரு நாட்டில் ஏற்கெனவே உள்ள தொழில் நிறுவனங்களை முற்றாக அழித்து விட்டு தனது தொழில் ஆதிக்கத்தை நிறுவுகின்றன. தமிழகத்தில் காளிமார்க், மாப்பிள்ளை விநாயகர் முதலான உள்ளூர் குளிர்பான நிறுவனங்களை ஒழித்துக் கட்டி விட்டு ஆதிக்கம் செய்யும் கோக்கும் பெப்சியுமே இதற்குச் சான்று கூறப் போதுமானது.

அன்னிய முதலீடுகளால் வேலை வாய்ப்புப் பெருகும் என்பது அப்பட்டமான புளுகைத் தவிர வேறில்லை. ஏனெனில், இவ்வகை முதலீடுகள் பெரும்பாலும் நிதி நிறுவன முதலீடுகளாக - பங்குச் சந்தை சூதாட்ட முதலீடுகளாகவே இருப்பதால், பெருமளவில் வேலைவாய்ப்பை உருவாக்க அடிப்படையே இல்லை. அடுத்து, சேவைத் துறையிலும் உற்பத்தித் துறையிலும் கணிசமாக நுழைந்துள்ள அன்னிய முதலீடுகள் நேரடி வேலை வாய்ப்பை உருவாக்காமல், ஒப்பந்தக்காரர்கள் மூலமே வேலைகளை முடித்துக் கொள்கின்றன. வேலை வாய்ப்பை உருவாக்குவதைவிட, தொழில் நிறுவனங்களைக் கைப்பற்றியும் கைமாற்றியும், ஆட்குறைப்பு செய்தும் இலாபத்தைச் சுருட்டுவதிலேயே அன்னிய நிறுவனங்கள் குறியாக உள்ளன. கடந்த 15 ஆண்டுகளாக தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கையால், பல்லாயிரம் கோடிக்கும் மேல் அன்னிய முதலீடுகள் வெள்ளமெனப் பாய்ந்தும் கூட, அவை உருவாக்கியுள்ள வேலை வாய்ப்பு மிக அற்பமானதுதான் என்ற நடைமுறை உண்மையே இதை நிரூபித்துக் காட்டுகிறது.

''அதெல்லாம் இருக்கட்டும்; மும்பை பங்குச் சந்தை 15,000 புள்ளிகளைத் தாண்டி புதிய உயரத்துக்குத் தாவுகிறது பாருங்கள். அன்னிய முதலீடுகளால் இந்தியப் பொருளாதாரம் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறுகிறது பாருங்கள்'' என்று ஏகாதிபத்திய எடுபிடிகள் உபதேசிக்கின்றனர்.

ஆனால், அதே மும்பை நகர் அமைந்துள்ள மகாராஷ்டிரா மாநிலத்தின் விதர்பா பிராந்தியத்திலும் ஆந்திராவிலும் கடன்சுமை தாளாமல் தற்கொலை செய்து கொண்ட சிறு விவசாயிகளின் எண்ணிக்கை 500-ஐத் தாண்டிக் கொண்டிருக்கிறது. மும்பை நகரில் மூடப்பட்ட சிறு தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 3000-க்கும் மேல் சென்று விட்டது.

இந்த உண்மை நிலவரங்களையெல்லாம் மூடிமறைத்து விட்டு, போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு எல்லா ஓட்டுப் பொறுக்கி அரசாங்கங்களும் அன்னிய முதலீடுகளை போட்டி போட்டுக் கொண்டு வரவேற்கின்றன. அன்னிய முதலீடுகளால் வளர்ச்சி பெருகிறது; கேழ்வரகில் நெய் வடிகிறது என்று கோயபல்சு பாணியில் புளுகி வருகின்றன. நாட்டைப் பேரழிவுக்குள் தள்ளி விட்டுள்ள அன்னிய முதலீடுகளையும் அதன் எடுபிடி ஆட்சியாளர்களையும் இன்னமும் சகித்துக் கொண்டிருந்தால், நாளைய வரலாறு நம்மைத்தான் இகழும்.

● தனபால்

பட்டினிச் சாவின் விளிம்பில் எத்தியோப்பியக் குழந்தைகள்:
அன்னிய முதலீடுகள் தோற்றுவித்த பயங்கரம்.




www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

போலீசின் பூட்ஸ் காலால் மிதிக்கப்பட்டு, அமுக்கிப் பிடிக்கப்படும் இந்த இளைஞரின் பெயர் முகமத் இத்தீஸ். இளம்பிள்ளைவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ள இவர், தனக்கு மூன்று சக்கர மிதிவண்டி கொடுத்து உதவும்படி சேலம் மாவட்ட ஆட்சியரிடம் பலமுறை மனு கொடுத்தும் கூட, உதவி கிடைக்கவேயில்லை. இதனால் விரக்தியுற்றுப் போன முகமது இத்தீஸ், தனது எதிர்ப்பைக் காட்டும் முகமாக, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் நுழைந்து, அதிகார வர்க்கத்தின் அலட்சியத்தை அம்பலப்படுத்தி முழக்கமிட்டதோடு, பிளேடால் தனது உடம்பைக் கீறிக் கொண்டிருக்கிறார். அவரிடமிருந்து பிளேடைப் பறிப்பது என்ற சாக்கில், போலீசு கும்பல், அவரை இப்படி மிருகத்தனமாக அமுக்கிப் பிடித்து வதைத்தது. தற்கொலைக்கு முயன்றதாக இத்தீஸ் மீது குற்றஞ்சுமத்தி, அவரைச்சிறைக்குள்ளும் தள்ளிவிட்டது.

உதவி கேட்ட ஊனமுற்றவரைத் தண்டிப்பது எத்தகைய குரூரம்! அரசு அறிவிக்கும் நலத் திட்டங்கள் நடைமுறையில் எப்படி செயல்படுத்தப்படுகிறது என்பதற்கும்; மக்களைப் புழு-பூச்சிகளைப் போல மிதிக்கும் அதிகார வர்க்கத்தின் திமிர்த்தனத்திற்கும் முகமத் இத்தீஸ் இன்னுமொரு சாட்சி!



# அரசு உதவி கேட்டால் அடக்குமுறை!